**கவனிக்க.**- 2024.03.07 ஆந் திகதிய 2375 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2376 - 2024 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2024.03.15

*2376 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 660 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 673 |

**கவனிக்க.**- பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் 2024, மாச்சு மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

657-B 82549-5,441 (2024/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.*

*2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)*

*4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

***கருத்திற் கொள்ளவும்.**– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.*

*5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு, விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.*

*7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும்* (www.rgd.gov.lk) *பெற்றுக்கொள்ள இயலும்.*

*8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2024, பெப்புருவரி 26.*

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | கண்டிப்பட்டினம் | கட்டுகஸ்தொட்ட பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

03-287

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தெல்தொட்டை | பாதஹேவாஹெட பிரிவின் தெல்தொட்டை பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பாத்ததும்பறை | உடதலவின்ன மடிஹேற பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | உடபலாத | உடபலாத பிரிவின் கம்பளை நகர் பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | தொளுவ | உடபலாத பிரிவின் கலுகமுவ பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | அகுரணை | அக்குரணை பிரிவின் மல்வாஹின்னகம பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | அகுரணை | அக்குரணை பிரிவின் குருந்துகஹ எல பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | அகுரணை | அக்குரணை பிரிவின் ரம்புக்கே எல பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | அகுரணை | அக்குரணை பிரிவின் நீரல்ல பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரிவின் சியம்பலாகஸ்தென்ன பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | அல்பிடிய கெலிஓய பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

*03-288*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேச வாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 26.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை மாபனாவத்துர பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பஸ்பாகே கோறளை | பஸ்பாகே கோறளை பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | யட்டிநுவர | உடுநுவர மற்றும் யட்டிநுவர மெதபலாத பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

03-289

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (தமிழ்) – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்களாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 26.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுதும்பறை | உடுதும்பறை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

03-290

## பொதுச் சேவைகள் ஆணைக்குழு

*புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு*

## புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் (நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III) இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிறைவேற்றுத்தரசேவை வகையீட்டின் தரம் III இல் காணப்படும் சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**: இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் பரீட்சார்த்திகளில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தகமையினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகத் தேர்வு குழாமினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வின் பெறுபேற்றின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளை குறித்த வெற்றிடத்தினை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். பொது உளச்சார்பு மதிப்பீட்டு நேர்முகத் தேர்வானது பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும். (இலக்கம் 06 இனைப் பார்வையிடவும்).

நியமனம் வழங்கப்படும் திகதியானது பொதுச் சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்**:

(i) கல்விசார் /தொழில்சார் தகைமைகள்

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் எடுத்திருத்தல் வேண்டும்.

(ii) *அனுபவம்*

உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பிறகு மூன்று (03) ஆண்டுகள் சட்டத்தரணியாகப் பணியாற்றியுள்ளதுடன் குறைந்தபட்சம் ஒரு செயலில் தொழில்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அனுபவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு சமர்ப்பிக்கும் ஆவணத்தில் அனுபவ காலம், உறுதிப்படுத்துபவரின் பதவி முத்திரை, திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

அல்லது

உச்ச நீதிமன்றத்தின் சட்டதரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அரச நிறுவனத்தில் சட்டப்பூர்வ பதவியில் மூன்று ஆண்டுகளுக்கும் (03) குறையாத அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: அடிப்படைத் தகுதியை நிரூபிக்கும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். சேவைக் காலத்தின் ஆரம்ப மற்றும் இறுதித் திகதியை தெளிவாகக் குறிக்கும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் அறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படலாம்.

* ஒரு சட்டப் பதவி என்பது, சட்டரீதியான பட்டம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதவியேற்றிருப்பது ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதியாகும்.

(iii) *தேகாரோக்கியம்*

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) *ஏனைய தகைமைகள்*

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் நற் பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **பதவி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அரசாங்கத்தின் எதிர்கால முடிவுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.நீங்கள் ஓய்வூதியத்திட்டம் / விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அதற்கான பங்களிப்பை நீங்கள் அவ்வப்போது அரசு நிர்ணயித்துள்ளபடி செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருட தகைமை காண் காலத்தினைக் கொண்டுள்ளது. குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னதாக, அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அவர் மற்றைய அரச கரும மொழியில் உரிய சித்தியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை சார்ந்த விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய திணைக்கள கட்டளைகளுக்கு உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பித்த மொழி மூலமானது பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது, மேலும், நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலமானது நீங்கள் நியமனம் பெற தகுதியுடைய மொழி மூலமாக இருக்கும்.

4. **வயது எல்லை.**- விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரியின் வயதானது 21 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.02.25ஆம் திகதிய 03/2016ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 1 இன் படி, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 47,615-10×1,335-8×1,630-17×2,170-ரூபா 110,895.00 (SL-1-2016) ஆகும்.

6. தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வில் பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்துறையில் முதுகலைமாணி பட்டம். | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டத்துறையில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் இருந்து சட்டத்தில் பட்டதாரி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் வேண்டும். | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து, | | |
| | - முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 10 | |
| | - வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் பட்டம் | 07 | |
| | - சாதாரண சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 05 | |
| | (ஈ) சட்டக்கல்லூரி இறுதியாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி | 10 | |
| | சட்டக்கல்லூரி இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி | 5 | |
| | **குறிப்பு** I : சிறப்புத் தேர்ச்சியுடனான சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சை 05 புள்ளிகளுக்கு மேல் தேர்ச்சி பெற்றால் மட்டுமே வழங்கப்படும். | | |
| | **குறிப்பு** II : அதிகூடிய தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

<table>
<tr><th>தொடர் இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td>02</td><td>

**மேலதிக அனுபவம்**

திறந்த நீதிமன்றத்தில் வழக்குகள் மற்றும் விளக்கக்காட்சிகள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல்

<table>
<tr><th></th><th>வழக்கு கோரப்படல் (ஒரு வழக்குக்கு)</th><th>நீதிமன்றில் தோன்றி விளக்கமளித்தல் (ஒரு வழக்குக்கு)</th></tr>
<tr><td>உச்ச நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>மாவட்ட நீதிபதி</td><td>2</td><td>3</td></tr>
</table>

**குறிப்பு *மேற்கண்ட தகைமைகளை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட தீர்ப்புகளின் நகல்களையோ அல்லது வழக்கின் கடைசி விசாரணை திகதியின் சான்றளிக்கப்பட்ட நகலையோ நேர்முகத் தேர்வுக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

</td><td>2<br>2<br>2<br>4<br>2</td><td>35<br><br>5<br>4<br>3<br>5<br>3</td></tr>
<tr><td>03</td><td>

**தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டப்படிப்புக்கான தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி அறிவியலினை பிரதான பாடமாக கற்றிருத்தல்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து அல்லது இலங்கை சட்டக்கல்லூரி அல்லது ஏனைய அரச அங்கீகாரம் பெற்ற தொழில்முறையிலான நிறுவனம் ஒன்றிலிருந்து தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப சட்டத்தில் டிப்புளோமா வினைப் பெற்றிருத்தல்.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது வேறொரு நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல்.

(ஈ) பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது இலங்கை சட்டக்கல்லூரி அல்லது ஏனைய அரச அங்கீகாரம் பெற்ற தொழில்முறை ஒரு நிறுவனத்தின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் சட்டத் துறையில் படிப்புகள் / பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பிறகு பெறப்பட்ட சான்றிதழ்கள். (அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்கள். ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும்.)

**குறிப்பு** : புள்ளிகள் உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

</td><td>10<br>08<br>05<br>04</td><td>10</td></tr>
</table>

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **மொழித் திறன்** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆங்கிலத்தை முக்கிய பாடமாகக் கொண்டு பட்டம் பெற்ற பட்டதாரியாக இருத்தல் வேண்டும். | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய அளவிலான (Moot Court competitions) போட்டிகளில் காட்டப்படும் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**தனியாள்**<br>(i) முதல் நிலை/சிறந்த தகுதி - 12<br>(ii) இரண்டாம் இடம் -10<br>(iii) மூன்றாம் இடம்/ஏனைய தகைமைகள் -08<br>**குழுக்கள்**<br>(i) முதல் நிலை/சிறந்த தகுதி - 10<br>(ii) இரண்டாம் இடம் -08<br>(iii) மூன்றாம் நிலை/ஏனைய தகமைகள் -06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆங்கில மொழி அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்தில் ஆங்கில மொழிக்காக பெற்ற டிப்புளோமா SLQF 3 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவமொன்றில் / அரசுடன் இணைந்த நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 1500 மணித்தியாலங்கள் பயின்று ஆங்கில மொழிக்கு டிப்ளோமா ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 10 | |
| | (ஈ) கல்வி பொதுத் தராதர சான்றிதழ் (உயர்நிலை) தேர்வில் (உள்ளூர் அல்லது லண்டன்) ஆங்கில மொழி அல்லது IELTS இல் குறைந்தபட்ச தேர்ச்சி மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேற்பட்டது அல்லது TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டது. | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆங்கில மொழி அல்லது ஏனையவற்றில் நிறுவனத்திடமிருந்து ஆங்கிலத்தில் ஒரு மேம்பட்ட சான்றிதழ் SLQF 2 நிலை சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**குறிப்பு**: மிக உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |
| 05 | **நேர்முகத் தேர்வின் போது காட்டப்படும் திறமைகள்**<br>பதவியின் பங்கை பூர்த்திசெய்ய வேண்டிய விண்ணப்பதாரரின்<br>• வலிமை கேள்விகள் (Strength questions) (02 புள்ளிகள்)<br>• சூழ்நிலை முடிவுகளை எடுக்கும் திறன் (Situational questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>• திறன் கேள்விகள்(Competency Questions) (10 புள்ளிகள்)<br>மதிப்பீடு செய்யப்படும் வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. | | 15 |
| | **மொத்தம்** | | 100 |

7. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துதல்**:- அனைத்து வகையிலும் முறையாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் போது விண்ணப்பதாரியினால் அனைத்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகத் தேர்வின் போது ஒருவரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்களினைப் பதிவு செய்யும் ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை** :

(i) விண்ணப்பங்களை செயலாளர், 'புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இல. 135, ஸ்ரீமான் அனகாரிக்க தர்மபால மாவத்தை,கொழும்பு 07' என்ற முகவரிக்கு 2024.04.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து முதல் பக்கத்திலும் 01 முதல் 04 வரையிலும், இரண்டாவது பக்கத்திலும் 05 முதல் 07 வரையிலும், எஞ்சியவற்றை மூன்றாவது பக்கத்திலும் அமையுமாறு தயாரித்து தமது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், "நிறைவேற்று சேவையின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / ஆயுதப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி அல்லது அரசு அல்லது மாகாண அரசுப் பணியில் நிரந்தரப் பதவியில் உள்ள இணைந்த மாதாந்த சம்பளம் ரூபா 47,615.00 அல்லது அதற்கு மேல் பெற்றுக் கொள்ளும் அலுவலரினால் சான்றுரைக்கப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தாங்கள் பணியாற்றும் திணைக்களத்தின் தலைவரினூடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தொலைந்து போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

9. **தவறான தகவல்களை வழங்குதல்**: ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கண்டறியப்பட்டால், உங்களது விண்ணப்பமானது இரத்துச் செய்யப்படும் என்பதோடு ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற பொய்யான அல்லது தவறான தகவல்கள் கண்டறியப்பட்டால், உரியநடைமுறைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவீர்கள்.

10. வெற்றிடத்தினை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்துடையதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், பொதுச் சேவை ஆணைக்குழு எடுக்கும் முடிவுகளே இறுதியானவையாக இருக்கும்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சோமரத்ன விதானபதிரன
செயலாளர்,
புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
இல. 135, ஸ்ரீமான் அனகாரிக்க தர்மபால மாவத்தை,
கொழும்பு 07,
2024, மாச்சு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தினை கூட்டில் இடவும்.
சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4)

**குறிப்பு**:- விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றம் செய்ய முடியாது.

1.0 1.1 முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி):..........
(சிங்களத்தில் /தமிழில்) ..........

1.2 முழுப் பெயர் :..........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ..........
(சிங்களத்தில் /தமிழில்) உதாரணம்: எம். ஜீ.எஸ்.பி.கே.குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர்(திரு./திருமதி/செல்வி):..........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி : ..........
(சிங்களத்தில் /தமிழில்) ..........

2.2 நிரந்தர முகவரி : ..........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........

3.0 3.1 ஆண் /பெண் : பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தினைக் கூட்டில் இடவும்)

3.2 குடியியல் நிலை: விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டில் இடவும்)

3.3 பிறந்த திகதி : ஆண்டு: மாதம் : திகதி :

3.4 2024....... ஆம் திகதியன்று வயது : வருடங்கள் : தங்கள் : நாட்கள் :

3.5 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

4.0 4.1 தொலைபேசி இலக்கம் : நிலையான

கையடக்க

5.0 கல்வித் தகைமைகள்

| 5.1 பட்டம் | தகைமையினைப் பெற்ற நிறுவனம் | திகதி |
|---|---|---|
| .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... |

6.0 உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட திகதி : .........................

6.1 உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் 03 வருடகால அனுபவத்தை பூர்த்திசெய்த திகதி : .............

6.2 அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறை உத்தியோகத்தராக 03 வருடகால அனுபவத்தை பூர்த்திசெய்த திகதி : ..............

* அடிப்படைத் தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் விண்ணப்பதாரியினால் சான்றுபடுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

7.0 விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு தகைமைகள் பற்றிய விபரங்கள்:-

7.1 மேலதிக கல்வித் தகைமைகள்:..............................................................................................................................
.........................................................................................................................................................................

7.2 மேலதிக தொழில்சார் அனுபவம்: ..........................................................................................................................
.........................................................................................................................................................................

7.3 தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு:...................................................................................................................
.........................................................................................................................................................................

7.4 மொழி ஆற்றல்: ......................................................................................................................................................
.........................................................................................................................................................................

* மேலதிக தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்க வேண்டிய அவசியமில்லை, நேர்முகத் தேர்வின் போது அத்தகைய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

8.0 நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டுள்ளீர்களா?
(ஆம் எனில் விபரம் தரவும்)
.........................................................................................................................................................................

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :-**
இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கிய அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையும் என்பதையும், விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதையும், நான் வழங்கிய இத்தகைய தகவல்கள் தவறானவை என நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், நான் தகமையற்றவனாவேன் என்றும் நியமனத்தின் பின்னர் கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் நானறிவேன் என்றும் சகல ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

திகதி: ...............................................

....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு. /திருமதி /செல்வி ........................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவர் என்முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................
கையொப்பத்தினை சான்றுபடுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப் பெயர் :..........................
பதவிப் பெயர் :..........................
திகதி :..........................

(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

11.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை (அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்.)

மேற்குறித்த விவரங்களை வழங்கியுள்ள திரு./திருமதி/செல்வி .................................... இந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும், அவர் வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், அவரின் கடமை மற்றும் வருகை என்பன திருப்திகரமாக உள்ளன என்றும், அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை என்றும், இந்த பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் எனவும் நான் சான்றளிக்கிறேன்.

......................................................................
திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :.................................

பதவிப் பெயர் :.................................

முகவரி :.................................

திகதி :.................................

(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

03-274

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைப் புகையிரதத் திணைக்களம்**

முகாமைத்துவ உதவி தொழில்நுட்பப் பிரிவு 2 ஆம் சேவைப் பிரிவில் புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவி இயந்திரவியலாளர் மற்றும் முகாமைத்துவ உதவி மின்னியலாளர் பதவிகளுக்கு III ஆம் தரத்தில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2021

Open Competitive Examination for Recruitment to Grade III of Railway Technological Management Assistant (Machanical) and Railway Technological Management Assistant (Electrical) in Management Assistant Technological Service Category Segment - 2021

01. மேற்குறிப்பிடப்பட்ட பதவிகள் தொடர்பில் 2021.02.05 ஆந் திகதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு மேலதிகமாகும்.

02. மேற்கூறிய பதவிகள் தொடர்பில் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி தினம் 2024.04.15 ஆந் திகதி என இத்தால் திருத்தியமைக்கிறேன். இது தொடர்பில் ஏலவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியிராது என இத்தால் அறியத்தருகின்றேன்.

எச். எம். கே. டபிள்யூ. பண்டார,
புகையிரத பொது முகாமையாளர்.

2024, மார்ச் 04.

03-267

## கல்வி அமைச்சு

## திறன் மேம்பாடு மற்றும் தொழிற்கல்விப் பிரிவு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் - கட்டுநாயக்க

எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான எந்திரவியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் – 2024 குழு

(கோட்பாட்டு கற்கை தவணைகள் பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திலும் நிறுவனத்தின் தேவைக்கமைவாக நிகழ்நிலை முறையிலும்)

கட்டுநாயக்கா, எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக எந்திரவியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த பரீட்சையானது தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் நியமங்களுக்குக் கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். இச் சட்டவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாவார்கள்.

1. **தகைமை.-**

1.1. **கல்வித் தகைமைகள்** .- (விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில்) அனைத்து பாடநெறிகளுக்கும், க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய அமர்வுகள் ஆகக்கூடியதாக 03 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் (03) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா.த) பரீட்சையில் (மூன்று அமர்வுகளுக்கு மேற்படாதவாறு) ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1.2. **வயது**.- 2023.12.31 ஆந் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அதன் பிரகாரம் 2025.12.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1998.12.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்த நாளைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியுண்டு.

**குறிப்பு**: கடல் எந்திரவியல் துறைக்காக தெரிவுசெய்யப்படும் போது வயது 20 வருடங்களுக்குக் குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2. **தெரிவு செய்வதற்கான நடைமுறை –**

2.1 மேலே இலக்கம் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான ஆகக்குறைந்த தகைமையுடன் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் உள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ் காட்டப்படும் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**எழுத்துமூலப் பரீட்சை.-**

2.2 அடிப்படை தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள சகல விண்ணப்பதாரிகளும் ஆங்கில மொழியிலான எழுத்துமூல பரீட்சையொன்றுக்குத் தோற்றல் வேண்டும்.

இப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக பல்தேர்வு வினாத்தாள்கள் இரண்டினை கொண்டமைந் திருக்கும்.

1. பொது விவேகம் – காலம் 01 மணித்தியாலம்-100 புள்ளிகள்
2. தொழில்நுட்ப மற்றும் பொதுத் தேர்வு – காலம் 01 மணித்தியாலம்-100 புள்ளிகள்

இந்த தொழில்நுட்ப மற்றும் பொதுத் தேர்வுகளின் கீழ் உங்களது அறிவு சிவில் எந்திரவியல், மின் எந்திரவியல், இயந்திர எந்திரவியல், க.பொ.த. (உயர் தர) இணைந்த கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய தலைப்புகளின் கீழ் பரீட்சிக்கப்படும்.

2.3 இந்த எழுத்துமூல பரீட்சை கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்த நிலையத்தில் மட்டும் நடாத்தப்படும்.

எழுத்திலான தகைமைப் பரீட்சைக்காக தகைமைகளை பெற்றுக்கொள்கின்ற எல்லா விண்ணப்பதாரிகளிடமும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நிலையம் தொடர்பாக பரீட்சை திணைக்களம் மூலம் அறிவிக்கப்படும்.

2.4 **நேர்முகப் பரீட்சை**:
எழுத்துமூல தகுதிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற ஒழுங்கு முறையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2.5 **தேர்வு செய்யும் முறை**:

| | |
|---|---|
| எழுத்துமூல பரீட்சைக்கான பரிந்துரைக்கப்பட்ட புள்ளி அளவு | 60% |
| Z-score பெறுமதிக்காக பரிந்துரைக்கப்பட்ட புள்ளி அளவு | 20% |
| நேர்முகப் பரீட்சைக்காக பரிந்துரைக்கப்பட்ட புள்ளி அளவு | 20% |

நேர்முகப் பரீட்சைக்காக பரிந்துரைக்கப்பட்ட புள்ளிகளின் அளவு பின்வருமாறு :

| | |
|---|---|
| பாட வெளிவாரி செயற்பாடுகளுக்கான புள்ளி அளவு | 10% |
| நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்க முன்னருள்ள ஏற்பாடு மற்றும் அதற்குத் தோற்றுவதற்கான ஒழுங்குமுறைகள் சம்பந்தமான புள்ளி அளவு | 10% |

மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சைகளின் பொருட்டு மொத்த புள்ளிகளின் அளவை அடிப்படையாக வைத்து அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்களின் ஒழுங்குமுறையில் இப்பாடநெறிக்காக 500 பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.6 தெரிவு செய்யப்படுபவர்கள் அனைவரும் அவர்கள் அந்தப் பாடநெறியை பதிவுசெய்வதற்கு முன்னர், தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனையொன்றினை செய்தல் வேண்டும். (கடல் எந்திரவியல் துறைக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவர்களுடைய பதிவு இடம்பெற்றதன் பின்னர் மற்றுமொரு விசேட மருத்துவ பரிசோதனையை தமது சொந்த செலவில் செய்தல் வேண்டும்.

2.7 பரீட்சார்த்திகள் (ஆண்கள்/ பெண்கள்) பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை மண்டப அதிகாரியின் திருப்திக்கேற்றவாறு தமது சுய அடையாளத்தை உறுதிப்படுத்தல் அவசியம். அதற்காக பின்வரும் ஏதேனுமொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தேசிய ஆளடையாள அட்டை
2. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
3. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அதே போல் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை நிரூபிப்பதற்காக முகம் மற்றும் இரு காதுகளை மூடாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அதனை மீறுபவர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவுற்று அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரிகளை அறிந்து கொள்ளுதற் பொருட்டு முகம் மற்றும் இரு காதுகள் மூடப்படாமல் காட்சியளித்தல் அவசியம்.

2.8 பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை விநியோகித்தலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பாடநெறிக்காக தகுதி பெற்றுள்ளாரென கருதுவதற்கு ஏற்புடைத்தானதல்ல.

**3. விண்ணப்பிக்கும் ஒழுங்குமுறை:**

❖ விண்ணப்பம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk தளத்தில் "Our Services" இன் கீழ் "Online Applications - Enrollment Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை பரீட்சை திணைக்களத்திடமும் பின்வரும் வகையில் பதிவுத் தபால் மூலமும் எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்திடமும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் பொறுப்பேற்றலானது 2024.03.18 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2024.04.18 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பம் திணைக்களத்தில் பொறுப்பேற்கப்பட்டது/பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதை முறைமையில் பிரவேசிப்பதற்கு பயன்படுத்தி கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பம் பூர்த்திசெய்வதற்கு முன்னர், பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பம் பூர்த்தி செய்கையில் குறித்த ஆலோசனைகளை கட்டாயமாகப் பின்பற்றவும். விண்ணப்பம் பொறுப்பேற்கும் திகதி வரை குறைப்பாடுகளுடன் கூடிய விண்ணப்பங்களைத் திருத்தம் செய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. முழுமை பெறாத விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.1 நிகழ்நிலை முறை ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் போது பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் பின்வருமாறாகும்.

❖ பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது நிகழ்நிலை முறைமையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மட்டும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலம் செலுத்தலாம். (Any Bank Credit Card)

(ii) இணையத்தள செலுத்தல் வசதிகளுடன் கூடிய எந்தவொரு வங்கி Debit Card மூலம் செலுத்தலாம். (Any Bank Debit Card with the Facility of Internet Transaction)

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் செலுத்தலாம். (Online Banking Method of Bank of Ceylon)

(iv) எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலம் செலுத்தலாம். (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு :**

- மேற்படி முறைகளினூடாக கொடுப்பனவுகளை மேற்கொண்ட முறை தொடர்பான ஆலோசனைகள், இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சைக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

- கொடுப்பனவுகள் கிடைத்தமை தொடர்பாக குறுஞ் செய்தியொன்று மூலம் (SMS) அல்லது மின் அஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் பொருட்டான மொத்த தொகையும் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன். பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி செலுத்தல் முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் குறைப்பாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பு கூறாது.

- பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணத்தொகை எக்காரணம் கொண்டும் மீள் செலுத்துவதற்கோ வேறு பரீட்சை பொருட்டு மாற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

- பயிலுநர்களைத் தெரிவு செய்யும் நடைமுறைக் கட்டணம் ரூபா 3,500.00 தொகை மக்கள் வங்கியில் கட்டுநாயக்க எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர் நலன்புரி கணக்கு இலக்கத்திற்கு 276-1-001-8-6351396 விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்தப்படல் வேண்டும். நீங்கள் நிகழ்நிலை முறையில் (Online) பரீட்சை திணைக்களத்திடம் அனுப்பி வைக்கும் விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து (Download) அதன் Hard Copy பெற்றுக்கொண்டு அதனுடன் ரூபா 3,500.00 ஆன தொகை செலுத்தியமைக்கான அசல் பற்றுச்சீட்டை (Original Slip) இணைத்து எந்திரவியல் தெழில்நுட்ப நிறுவனத்திடம் பதிவு தபால் ஊடாக அனுப்பி

வைக்கப்படுதல் வேண்டும். உரிய பற்றுச்சீட்டில் விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடனான பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் குறித்த பற்றுச்சீட்டு என்பன வங்கி கிளையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தல் கட்டாயமாகும்.

(மேற்படி கட்டணம் உரிய வகையில் செலுத்தப்படாமை/ வேறு ஒருவரின் பெயரில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்/விண்ணப்பதாரியின் அல்லாத தகவல்கள் பற்றுச்சீட்டில் குறிப்பிடுதல்/அசல் பற்றுச்சீட்டை வங்கி கிளையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தாதிருத்தல் போன்ற விடயங்களின் மீது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பதாரியால் தமது பற்றுச்சீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.)

3.2 தங்களது விண்ணப்பம் மற்றும் உரிய ஆலோசனைகளுக்கமைவாக நிகழ்நிலை முறை ஊடாக (Online) இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பத்தில் அச்சுப் பிரதியை பதிவு தபால் ஊடாக எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

தங்களது விண்ணப்பம் கவனத்தில் கொள்வதற்காக மேற்படி இரண்டு முறையிலும் கட்டாயமாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு** :-

- எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி 2024.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விசேட பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் 2024" என்று குறிப்பிடல் வேண்டும்.

பதிவாளர்/நிருவாக உத்தியோகத்தர்,
எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம்,
18 ஆம் மைல் கல்,
பன்சலை வீதி,
கட்டுநாயக்க

Registrar/ Administrative Officer,
Institute of Engineering Technology,
18 Mile Post,
Temple Road,
Katunayake.

**4. நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் பாடநெறிகள்**:

விடயதுறை வழங்குதலானது மாணவர்களின் விருப்பம் மற்றும் நிறுவனத்திற்கு தெரிவு செய்வதற்காக நடாத்தப்படும் எழுத்திலான பரீட்சை, Z-Score பெறுமதி மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்த புள்ளிகளை அடிப்படையாக் கொண்டதாகும்.

4.1 சிவில் எந்திரவியல் துறை

1. சிவில்-கட்டட மற்றும் கட்டமைப்பு எந்திரவியல் பாடநெறி
2. சிவில்-பெருவீதி எந்திரவியல் பாடநெறி
3. சிவில்-நீர் மற்றும் சூழல் எந்திரவியல் பாடநெறி

4.2 மின்சார மற்றும் இலத்திரனியல் எந்திரவியல் துறை

4. மின்சார மற்றும் இலத்திரனியல் -வலை மற்றும் தொடர்பாடல் எந்திரவியல் பாடநெறி
5. மின்சார மற்றும் இலத்திரனியல் - மின்சக்தி எந்திரவியல் பாடநெறி

4.3 இயந்திர எந்திரவியல் துறை

6. இயந்திர - தன்னியக்க அசைவு எந்திரவியல் பாடநெறி
7. இயந்திர - இயந்திர (உற்பத்தி) எந்திரவியல் பாடநெறி
8. இயந்திர - கடல் எந்திரவியல் பாடநெறி

* எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கடல் எந்திரவியல் பாடநெறி, ISO 9001:2015 தகுதிச் சான்றிதழின் கீழ் நடாத்தப்படும்.

* கடல் எந்திரவியல் பாடநெறியானது, சர்வதேச சமுத்திர ஒன்றியத்தின் STCW-95 மற்றும் 7.04 மாதிரி பாடநெறி மற்றும் அதனோடு தொடர்புடைய கடல் எந்திரவியல் செயல்விளைவு மட்டத்தின் அறிவு, புரிந்துணர்வு மற்றும் தொழிற் தேர்ச்சி சம்பந்தமான உரிமைக் கட்டளை சார்ந்த தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே, திட்டமிடப்பட்டுள்ளது.

5. **பயிற்சியளிக்கும் காலம் பற்றிய விபரம்**– இப்பாடநெறி முழுநேர கால பாடநெறியாவதுடன், நான்கு வருடங்களைக் கொண்டதாகும். 30 மாதங்கள் கோட்பாட்டு வழிமுறை பாடநெறி, 18 மாதங்கள் பிரயோக பயிற்சியுடன் கீழ்வரும் முறைப்படி செயற்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதலாவது மற்றும் இரண்டாவது கோட்பாட்டு கற்கை கல்வியாண்டு எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் மற்றும் நிகழ்நிலை முறையில் | 12 மாதங்கள் |
| அடிப்படை கைத்தொழில் பயிற்சி வெளியக பயிற்சி நிறுவகங்களில் | 06 மாதங்கள் |
| மூன்றாவது மற்றும் நான்காவது கோட்பாட்டு கற்கை கல்வியாண்டு எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் மற்றும் நிகழ்நிலை முறையில் | 12 மாதங்கள் |
| அடிப்படை கைத்தொழில் பயிற்சி வெளியக பயிற்சி நிறுவகங்களில் | 06 மாதங்கள் |
| ஐந்தாவது (இறுதி) கோட்பாட்டு கற்கை கல்வியாண்டு எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் மற்றும் நிகழ்நிலை முறையில் | 06 மாதங்கள் |
| மூன்றாவது (இறுதி) கைத்தொழில் பயிற்சி வெளியக பயிற்சி நிறுவகங்களில் | 06 மாதங்கள் |

இப்பாடநெறிக்கான கோட்பாட்டு வழிமுறைகள் மற்றும் பாடநெறி பிரயோக செயற்பாடுகள் இதே நிறுவகத்தின் கீழ் பெற்றுத்தரப்படும் என்பதுடன், கைத்தொழில் பயிற்சிகள் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கைத்தொழில் நிறுவகங்களினூடாக பெற்றுத்தரப்படும்.

6. **பாடநெறி மொழிமூலம்**: ஆங்கில மொழியில்.

7. **பயிலுனர் ஒப்பந்தம்** –

7.1 தெரிவுசெய்யப்படும் சகல பயிலுநர்களும் பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி பெறும் நிறுவனம் ஆகிய இரு தரப்பினரிடையே பொறுப்புக்கள் சாட்டப்படும் விசேட பயிலுநர் ஒப்பந்தமொன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

7.2 பயிற்சியின் பின்னர் பயிலுநர்களுக்கு தொழில் பெற்றுத்தருவதற்கு நிறுவகம் பொறுப்பில்லை.

7.3 இப்பாடநெறிக்காக பதிவுசெய்யும் சகல மாணவர்களும் முழு பாடநெறி காலத்துக்குள்ளும் சமுகமளிக்கும் வரவு வீதமானது நிறுவகத்தினால் அனுமதிக்கும் அளவுக்குள்ளேயே இருத்தல் அவசியம். அவ்வாறின்றி நடக்கும் போது பரீட்சைக்குத் தோற்ற முடியாது போகும் என்பதுடன் பாடநெறியிலிருந்து விலக்களிக்கப்படவும் நேரிடும்.

8. **பயிலுனர் பதிவு** .-

8.1 பாடநெறிக்கு பதிவு செய்யும் நேரத்தில் திருப்பிச் செலுத்தப்படும் கட்டணமாக ரூபா 5.000.00 வைப்புப் பணமாக செலுத்த வேண்டும். இப் பாடநெறியை செவ்வனே பூரணப்படுத்தியவர்களுக்கு மட்டுமே இந்த வைப்புப் பணத்தைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள முடியும்.

தெரிவாகும் சகல பயிலுநர்களும் பதிவு செய்யும் நேரத்தில், பதிவுக் கட்டணமாக ரூபா 1,000.00 உம், கடித ஆவணங்கள் ஆகியவற்றுக்கு ரூபா 3,000.00 உம் என்ற வகையில் மொத்தமாக ரூபா 4,000.00 உம் திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும், க.பொ.த. (சாதாரண தர) மற்றும் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளை உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

8.2 சமுர்த்தி/அஸ்வெசும மானியம் உரித்துடைய குடும்பத்திலிருந்து வரும் அங்கத்தவராக இருப்பின், அதற்கு உரிய மூலப் பிரதிகளை (சமுர்த்தி அட்டை மற்றும் கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்டு பிரதேச செயலாளரினால்

உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) சமர்ப்பிப்பதன் மூலம் திருப்பிச் செலுத்தப்படவுள்ள வைப்புப் பணத்திலிருந்து விலக்குப் பெற முடியும்.

9. **சான்றிதழ் வழங்கல் -**

9.1 வெற்றிகரமாக கோட்பாடு மற்றும் பிரயோக பயிற்சிகளை முடித்து சித்தி பெறும் பயிலுநர்கள் நிறுவகத்தோடு உள்ள சகல ஒப்பந்தங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டதன் பின்னர், எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

9.2 சான்றிதழ் அளிப்பு வைபவம் பொருட்டு செலவிடப்படும் பணம் பாடநெறியின் இறுதியில் மாணவர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாக எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் பொறுப்புக் கூற மாட்டாது.

மொழிகளுக்கிடையில் ஏதேனும் தொடர்பின்மை அல்லது பொருத்தமின்மை காணப்படின் அவ்வாறான சூழ்நிலைகளில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

11. இந்த கற்கைநெறி கற்பதற்காக ரூபா 150,000.00 தொகை மொத்த கற்கைநெறி கட்டணமாக அறவிடப்படும்.

சமுர்த்தி/அஸ்வெசும மானியம் உரித்துடைய அல்லது குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பத்தில் உள்ள அங்கத்தவர் ஒருவர், இப்பாடநெறியை கற்பதற்கு தெரிவாகினால் அவர் பாடநெறிக்கான கட்டணம் பொருட்டு சலுகை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட,
இராஜகிரிய.

03-308

---

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் இயங்குகின்ற பட்டப்படிப்பு, உயர் டிப்ளோமா, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளை வழங்குகின்ற ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். இந் நிறுவனம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25A பந்தியின் கீழ் பட்டங்கள் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்படவுள்ள பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பட்டப் பின் படிப்பு பாடநெறிகள்**

| பாடநெறித் தலைப்பு | காலம் | பாடநெறிக் கட்டணம் (ரூ.) | நிலையம் |
|---|---|---|---|
| சமூகப்பணி முதுமாணி (பாட விதானம்)<br>தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 125,000.00 | சீதுவை, அம்பாறை, தலாவை (அநுராதபுரம்), கிளிநொச்சி, ரண்ண (ஹம்பாந்தோட்டை) |
| சமூகப்பணி முதுமாணி (ஆய்வினை மையமாகக் கொண்டது)<br>தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | இரண்டு வருடங்கள் | 250,000.00 | |

- சமூகப்பணி முதுமாணி விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் : சமூகப்பணி, சமூக விஞ்ஞானம் மற்றும் சமூகப்பணியுடன் தொடர்பான துறையில் இளமாணிப் பட்டமொன்றினை பூர்த்திசெய்திருத்தல்.

உயர் டிப்ளோமா பாடநெறிகள் :

| பாடநெறித் தலைப்பு | காலம் | பாடநெறிக் கட்டணம் (ரூ.) | பதிவுக் கட்டணம் (ரூ.) | நிலையம் |
|---|---|---|---|---|
| சமூகப்பணி உயர் டிப்ளோமா தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | இரு வருடங்கள் | 76,000.00 | 2,000.00 | சீதுவை பிரதான அலுவலகம் |
| சமூகப்பணி டிப்ளோமா தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 66,000.00 | 2,000.00 | சீதுவை, அம்பாறை, தலாவை (அநுராதபுரம்), கிளிநொச்சி, ரண்ண (ஹம்பாந்தோட்டை) |
| உளவளத்துணை உயர் டிப்ளோமா தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | இரு வருடங்கள் | 76,000.00 | 2,000.00 | சீதுவை பிரதான அலுவலகம் |
| உளவளத்துணை டிப்ளோமா தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 66,000.00 | 2,000.00 | சீதுவை, அம்பாறை, தலாவை (அநுராதபுரம்), கிளிநொச்சி, ரண்ண (ஹம்பாந்தோட்டை) |

- சமூகப்பணி டிப்ளோமா மற்றும் உளவளத்துணை டிப்ளோமாவிற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் : க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
- சமூகப்பணி உயர் டிப்ளோமா மற்றும் உளவளத்துணை உயர் டிப்ளோமாவிற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்: 30 மதிப்பெண்களைக் (Credits) கொண்ட உளவளத்துணை டிப்ளோமா/ சமூகப்பணி டிப்ளோமா பாடநெறியினை பூர்த்திசெய்திருத்தல்.

**டிப்ளோமா பாடநெறிகள்**

| பாடநெறித் தலைப்பு | காலம் (மாதங்கள்) வார இறுதி | பதிவுக் கட்டணமும் பாடநெறிக் கட்டணமும் (ரூ.) | பதிவுக் கட்டணம் (ரூ.) | நிலையம் |
|---|---|---|---|---|
| **சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா** சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 66,000.00 | 2,000.00 | சீதுவை, அம்பாறை, தலாவை (அநுராதபுரம்), கிளிநொச்சி, ரண்ண (ஹம்பாந்தோட்டை) |
| **முதியோர் பராமரிப்பு மற்றும் முதுமையியல் டிப்ளோமா** சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 66,000.00 | 2,000.00 | |
| **சமூக பராமரிப்பு டிப்ளோமா** சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 66,000.00 | 2,000.00 | |
| **பெண்கள் வலுவூட்டல் டிப்ளோமா** சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலம் | ஒரு வருடம் | 66,000.00 | 2,000.00 | |
| **உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா** இளைஞர்களுக்கான ஆங்கில டிப்ளோமா | நான்கு மாதங்கள் | 30,000.00 | 2,000.00 | |

- விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் : க. பொ. த. உயர் தரத்தில் சித்தியடைந்திருப்பது டிப்ளோமா மட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையாகும். உரிய துறையில் அனுபவம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**உயர் சான்றிதழ்/சான்றிதழ் பாடநெறிகள் (வார இறுதி) :**

| பாடநெறித் தலைப்பு | காலம் (மாதங்கள்) | பாடநெறிக் கட்டணம் (ரூ.) | பதிவுக் கட்டணம் (ரூ.) | நிலையம் |
|---|---|---|---|---|
| சமூகப்பணி உயர் சான்றிதழ் பாடநெறி<br>சமூகப்பணி சான்றிதழ் பாடநெறி<br>தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | 09 மாதங்கள்<br>06 மாதங்கள் | 35,000.00<br>30,000.00 | 2,000.00 | சீதுவை, அம்பாறை, தலாவை (அநுராதபுரம்), கிளிநொச்சி, ரண்ண (ஹம்பாந்தோட்டை) |
| உளவளத்துணை உயர் சான்றிதழ் பாடநெறி<br>உளவளத்துணை சான்றிதழ் பாடநெறி<br>தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | 09 மாதங்கள்<br>06 மாதங்கள் | 35,000.00<br>30,000.00 | 2,000.00 | |
| சிறுவர் மையப்படுத்திய சமுதாய அபிவிருத்தி உயர் சான்றிதழ் பாடநெறி<br>சிறுவர் மையப்படுத்திய சமுதாய அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி<br>தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | 09 மாதங்கள்<br>06 மாதங்கள் | 35,000.00<br>30,000.00 | 2,000.00 | |
| முதியோர் பராமரிப்பு சான்றிதழ் பாடநெறி<br>தமிழ்/சிங்கள/ஆங்கில மொழிமூலம் | 06 மாதங்கள் | 30,000.00 | 2,000.00 | |
| உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில சான்றிதழ் பாடநெறி | 02 மாதங்கள் | 15,000.00 | 2,000.00 | |

1. சான்றிதழ் பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்.
   (i) க. பொ. த. சாதாரண தர பரீட்சை/NVQL3 சித்தியடைந்திருத்தல்
   அல்லது
   (ii) நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய இதற்கு சமமான கல்வித் தகைமைகள்.

- நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப பாடநெறிகள் நடாத்தப்படும் என்பதுடன் ஆகக்குறைந்தது 50 மாணவர்கள் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆரம்பிக்கும் திகதி மற்றும் நிலையம் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

உரிய முறையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், லியனகேமுல்லை, சீதுவை என்ற முகவரிக்கு 25.03.2024 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். இணைய வழி ஊடாக www.nisd.ac.lk என்ற இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம். தபாலில் விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை,
சீதுவை.

03-340

## கல்வி அமைச்சு

*மூன்று வருடகால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பயிலுவதற்காக 2021 ஆம் ஆண்டு அல்லது 2022 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் பயிலுநர்களின் இரு தொகுதியினரை(02) ஒரே தடவையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்குதல் – 2023(2024)*

1.0 தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைத் தொடர்வதற்கு ஆட்சேர்க்கும் நிமித்தம் தேவையான கல்வித் தகைமைகளையும் தகவுதிறன்களையுமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இது உரித்தாவது 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்க்கு மாத்திரமே.

1.2 அதற்கமைய 2021 ஆம் வருடத்தில் அல்லது 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தோற்றி அதில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு இதற்காக விண்ணப்பிக்க இயலுமாகும்.

1.3 அனைத்து விண்ணப்பதாரிகளும் தொடரறா முறை (Online system) ஊடாக வர்த்தமானி அறிவித்தலில் 10.0 இல் "விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள்" பகுதியில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

1.4 2021 மற்றும் 2022 எனும் இரு வருடங்களுக்கும் உரியதாக விண்ணப்பிக்க தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் வருடங்கள் இரண்டுக்கும் வேறு வேறாக தொடரறா முறையில் (Online system) விண்ணப்பித்தல் வேண்டும்.

1.5 விண்ணப்பித்தல் 2024.04.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் மிகுந்த அவதானத்துடன் வாசித்து விளங்கிக்கொண்டு, அதன் பிரகாரம் தொடரறா முறையில் (Online system) விண்ணப்பிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரிகளின் வசமானதாகும். சரியான முறையில் விண்ணப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

1.7 விண்ணப்பிக்க முன் வர்த்தமானி அறிவித்தலில் 14.0 இன் கீழ் 14.1 - 14.8 எனும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு பாடநெறிக்காகவும் 2021 மற்றும் 2022 வருடங்களில் க.பொ.த. (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி மாவட்ட மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பாக தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டு விண்ணப்பிப்பது உகந்தது.

2.0 **தகவுதிறன்**

சகல விண்ணப்பதாரிகளும் –

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.2 சிறந்த நடத்தை, சிறந்த உடல், உள ஆரோக்கிய நிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 வயது:

2.3.1 2023. 01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.3.2 சமய பாடநெறிக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டிய சகல மதகுருமார்கள் / வணக்கத்துக்குரியவர்கள் 2023.01.01 அன்று 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.4. விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.0 **அடிப்படை கல்வித்தகைமைகள்** :-

3.1

3.1.1 பௌத்த தர்ம பாடநெறி தவிர ஏனைய அனைத்து பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக கீழ்க்காட்டப்பட்டுள்ள 3.2 மற்றும் 3.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

3.1.2 பௌத்த தர்ம பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் போது மட்டும் 3.2 தகைமையுடன் 3.3.1 அல்லது 3.3.2 எனும் தகைமைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*3.3*

*3.3.1 விண்ணப்பதாரிகள் க.பொ.த.(சாதாரணதர) பரீட்சையில் மொழிமூல மொழி (சிங்கள மொழி/தமிழ் மொழி) மற்றும் கணிதம் உள்ளிட்ட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் கட்டாயமானதாகும். இந்த தகைமை இரண்டு அமர்வுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் முதல் அமர்வில் முதல்மொழி (சிங்கள மொழி/தமிழ் மொழி) உள்ளிட்டதாக ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் திறமை சித்தி மூன்றினை (03) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும். சிங்கள மொழிமூல பாடநெறிக்காக உரிய மொழிமூல மொழி சிங்களம் என்பதோடு, தமிழ் மொழிமூல பாடநெறிக்காக உரிய மொழிமூல மொழி தமிழாகும்.*

**கவனத்திற் கொள்க.-**

*சிங்கள அல்லது தமிழ் மொழிமூல பாடநெறிக்காக மேற்குறித்த க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் உரிய மொழிமூலத்தில் தோற்றியிருக்க வேண்டும்.*

*3.3.2 பௌத்த தர்ம பாடநெறிக்காக விண்ணப்பிப்பவர்கள் மேலே 3.3 யில் 3.3.1 யின் தகுதி அல்லது ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்கள மொழி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.*

*3.4. மேற்குறிப்பிட்ட 3.2. மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படை கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட க.பொ.த. (சாதாரண தர) தகைமைகள் மூன்று தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.*

*3.5 ஒவ்வொரு பாடநெறி தொடர்பாக தேவையான விசேட தகைமைகள் அந்தந்தப் பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.*

**கவனத்திற் கொள்க :-**

*(அ) க.பொ.த. (சாதாரணதர) பாடத்திட்டத்தின் கீழ் கவனத்தில் கொள்ளப்படுகின்ற பாடங்கள்:-*
*மையப் (பிரதான) பாடம் :-*

*(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும் /தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கிலமொழி (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்*

*தொகுதிப் பாடம்:-*

*(i) முதலாவது தொகுதிப் பாடங்களிடையே யாதேனும் ஒரு பாடமும்*
*(ii) இரண்டாவது தொகுதிப் பாடங்களிடையே யாதேனும் ஒரு பாடமும்*
*(iii) மூன்றாவது தொகுதிப் பாடங்களிடையே யாதேனும் ஒரு பாடமும்.*

*(ஆ) ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கவனத்திற் கொள்ளப்படும் பாடங்கள்*

*(i) சிங்களம், (ii) பாலி (iii) சமஸ்கிருதம், (iv) ஆங்கிலம், (v) கணிதம், (vi) திரிபிடக தர்மம்*

*(இ)* ***எதிர்கால ஆட்சேர்ப்பின் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட தகைமைகளின் கீழ் காட்டியுள்ள க.பொ.த. (சாதாரண தர) குறைந்த பட்ச தகைமை திறமை சித்தியென திருத்தப்படுகின்றது.***

*3.6 ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழித் தேர்ச்சியை பின்வருமாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

*3.6.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி /ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*3.6.2 மேற்கத்திய இசை பாடநெறி ஆங்கில மொழிமூலத்தில் மட்டுமே நடத்தப்பட்டாலும், ஆங்கில மொழிமூலத்தில் மட்டுமன்றி ஏனைய மொழிமூலத்தில் க.பொ.த. (உயர்தரம்) கற்ற விண்ணப்பதாரர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.*

*3.6.3* ***அனைத்து கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஆங்கில மொழி மூலமாக நடைபெறுவதால் ஆங்கில மொழியில் பாடநெறியை பயிலக்கூடிய விண்ணப்பதாரிகள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிப்பது உகந்ததாகும்.***

3.7. சித்திரம்/ நடனம் (கீழைத்தேய)/ நடனம் (பரதம்)/ சங்கீதம் (கீழைத்தேய) / சங்கீதம் (கர்நாடகம்) / நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடநெறிகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு தரப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z புள்ளிப் பெறுமான தொடரொழுங்கின்படி மாவட்ட அடிப்படையில் மற்றும் தேசிய அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, தெரிவு மேற்கொள்ளப்படுவது விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் உரிய அழகியற் பாடத்துக்காக பெற்றுக்கொண்ட தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி அவர்களின் Z புள்ளிப்பெறுமானத்தை அதனுடன் பொருத்தி தயாரிக்கப்படும் முன்னுரிமை தொடரொழுங்குக்கு அமைய மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரிகளை தேர்ந்தெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. *அதற்கமைய உயர் Z புள்ளிப்பெறுமானத்தோடு உயரிய சித்தித் தரத்தை உரிய அழகியல் பாடத்துக்கு பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உரித்தாகும்.

* மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தேசிய அடிப்படையில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

3.8 **தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் (2024.04.05) அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.**

4.0 **ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான தகைமைகள் :-**

கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக உங்கள் விசேட கவனம் செலுத்தப்படுவது அவசியமானது.

**கவனத்திற் கொள்க :-**

(அ) பாடநெறியின் மொழிமூலத்தை தெரிவு செய்யும் போது வர்த்தமானி அறிவிப்பின் 5.0 யில் காட்டப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்ட ஒவ்வொரு பாடநெறியும் நடத்தப்படும் மொழிமூலம் தொடர்பாகவும் ஒவ்வொரு பாடநெறியின் கீழும் அதற்கு அவசியமாகும் தகைமைகள் தொடர்பாகவும் மிகவும் தெளிவான விளக்கத்தைப் பெற்று கொள்ள வேண்டியது விண்ணப்பதாரின் வசமானதாகும்.

(ஆ) மேற்படி 3.0 இல் 3.2 மற்றும் 3.3 இல் காட்டப்பட்டிருப்பது கல்வியியற் கல்லூரி பிரவேசத்திற்கு விண்ணப்பிப்பதற்காக க.பொ.த. (உயர்தர) மற்றும் (சாதாரண தர), அடிப்படை பிரிவெனா இறுதிப் பரீட்சைகளில் பூர்த்தி செய்யப்படவேண்டிய ஆகக் குறைந்த அடிப்படைக் கல்வித் தகைமைகளாகும். அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடநெறி தொடர்பாகவும் விசேடமாக பூர்த்தி செய்யப்படவேண்டிய பாடத் தேர்ச்சி அவ்வப் பாடநெறிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(இ) ஒவ்வொரு பாடநெறியின் கீழும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட அல்லது / மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டியதற்காக காட்டப்பட்ட கோட்டா பெறுமானம், முன்னுரிமைத் தொடரொழுங்கு எனுமாறான அனைத்து விடயங்களும் 2021 ஆம் மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக வெவ்வேறான வகையில் கவனத்திற் கொள்ளப்படும்.

(ஈ) உடற்கல்விப் பாடநெறியில் விண்ணப்பதாரிகளின் விளையாட்டுச் சான்றிதழ் புள்ளிகளின் வரிசைப்படியும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறி மற்றும் கோட்டா பெறுமானம் காட்டப்பட்டுள்ள ஏனைய பாடநெறிகளுக்கும் அதற்கான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள வாசகங்களுக்கு ஏற்றவாறும் ஏனைய அனைத்து பாடநெறிகளுக்கும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட முறைப்படி விண்ணப்பதாரியின் Z புள்ளித் தொடரொழுங்குக்கு அமைய நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

(உ) ஒரு குறிப்பிட்ட பாடநெறிக்கு (கத்தோலிக்க/கிறிஸ்தவ சமயத்தை தவிர) ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான பல்வேறு தகுதிகளுக்கு ஒதுக்கீட்டு மதிப்பு (சதவீதம்) குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில், அந்த பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையிலிருந்து தொடர்புடைய கோட்டா மதிப்பிற்கு சமமான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் இருந்து தொடரறா தரவு முறைமை (Online system) தகவலிலிருந்து ஒரு கணினி நிகழ்ச்சிநிரல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதோடு அவர்களின் சான்றிதழ்கள், தகைமைகள் பரிசீலிக்க நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து அவற்றில் தகுதி தொடரொழுங்கு வரிசையின் அடிப்படையில் உரிய விண்ணப்பதாரிகள் அளவு தெரிவு செய்யப்படும்.

(ஊ) ஒவ்வொரு பாடநெறிக்காக தகைமைகளை கவனத்திற் கொள்ளப்படும் தொகுதியினர் சில இருக்கக்கூடும் என்பதோடு, யாதும் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த கோட்டா பெறுமானத்துக்கு அமைவாக உரிய சதவீத பெறுமானம் கணக்கிடப்படும் போது சில தொகுதியினர்களுக்கு விண்ணப்பதாரர்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்க மற்றும் ஆட்சேர்க்க வாய்ப்புகள் இல்லாத போதல் கூடும். விண்ணப்பிக்கும் போது அது தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி செயற்படும் போது விண்ணப்பதாரர்க்கு மிகவும் அனுகூலமாக இருக்கும்.

(எ) ஏதாவது பாடநெறிக்கான தொகுதிகள் சிலவற்றின் கீழ் ஆட்சேர்க்கப்படும் போது ஒவ்வொரு தொகுதிகளுக்கும் உரிய முழுமையான வெற்றிட எண்ணிக்கையின் (விகிதாசார) எண்ணிக்கை ஒதுக்கப்படுவது வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ள அந்த ஒவ்வொரு பாடநெறிகளின் தொகுதி இலக்க தொடரொழுங்கின் முன்னுரிமை அடிப்படையிலாகும்.

(ஏ) “தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசைப்படி” குறிப்பிடப்பட்டிருக்கும் பாடநெறிகளில் அந்த வரிசைப்படுத்தல் குறித்து கருதுவது தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைப்படி தெரிவு செய்யும் போதே ஆகும்.

(ஐ) உடற்கல்விப் பாடநெறியின்போது ஒவ்வொரு தொகுதியின் கீழ் விளையாட்டுப் புள்ளிகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யும் விசேட செயன்முறைகளுக்கு அமைவாக அவ்வப் பாடநெறியின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தரப்பங்களில் அதன் பிரகாரமும், ஏனைய பாடநெறிகளின் போது தகைமையுடன் கூடிய விண்ணப்பதாரிகளின் Z புள்ளித் தொடரொழுங்கு அடிப்படையிலும் சேர்த்துக்கொள்ளும் நடைமுறைக்கு அமைவாக தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

(ஒ ) யாதும் சமய நெறி கற்கைக்கு விண்ணப்பிக்க விரும்பினால் விண்ணப்பதாரரின் சமயம் தொடர்பான பாடநெறிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் தனது சொந்த சமயத்தை தவிர வேறு சமய பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியாது.

➢ தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடாத்தப்படும் ஒவ்வொரு பாடநெறிகளுக்குமான ஆட்சேர்ப்பதற்குரிய கல்வித் தகைமைகள் மற்றும் விசேட தகைமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | ***01*** | - | **ஆரம்பக்கல்வி (சிங்களம்)** |
| | ***02*** | - | **ஆரம்பக்கல்வி (தமிழ்)** |

*4.1*

4.1.1 க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப்பிரிவில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி பாடங்களுடன் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகள்

4.1.1.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு கலைப்பிரிவில் தோற்றி சிங்கள மொழி/தமிழ் மொழி பாடங்களுடன் மூன்று (03) பாடத்தில் ஒரே அமர்வில் சித்தியிடைந்திருத்தல்.

மற்றும்

4.1.1.2 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் முதல் மொழி (சிங்களம்/ தமிழ்) மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம் திறமைச் சித்தி மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.1.2. க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழி /தமிழ் மொழிப் பாடம் இல்லாமல் ஏதேனும் ஒரு பாடத்துறையை கற்ற விண்ணப்பதாரிகள்.

4.1.2.1 2021 ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப் பாடத்துறையில் தோற்றி சிங்கள மொழி/தமிழ் மொழி இல்லாமல் வேறு மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.1.2.2 2021 ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/உயிரியல் விஞ்ஞானம்), வணிகம், “ஏனைய” , தொழில்நுட்ப பாடத்துறை போன்ற யாதேனும் பாடப்பிரிவில் தோற்றி மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.1.2.3 3.0 இல் 3.3.1. க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் முதல் மொழி (சிங்களம்/ தமிழ்) பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியும், கணிதத்திற்கு திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பக் கல்வித்துறைக்கு உள்வாங்கப்படும் மொத்த எண்ணிக்கையில் :

(i) க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குக் கலைப்பாடத்துறையில் தோற்றி சிங்கள மொழி/ தமிழ் மொழி ஒரு பாடமாக கற்ற விண்ணப்பதாரிகளின் 60% வீதமும்,

(ii) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழி/தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்காத கலைப் பிரிவின் விண்ணப்பதாரிகளில் 10% வீதம், விஞ்ஞான (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல்) பிரிவின் விண்ணப்பதாரிகளில் 10% மற்றும் வணிக பாடப்பிரிவில் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகள் 10%வீதமும்

(iii) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் "வேறு பாடத்துறையில்" கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளில் 5% மற்றும் தொழில்நுட்பத் துறையில் கற்ற விண்ணப்பதாரிகளில் 5% என்பதாக அமையுமாறு,

உரிய விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.

(iv) குறிப்பிட்ட பாடத்துறையில் மாவட்ட/மாகாண/தேசிய என்ற அனைத்து திறமை வரிசை முறையிலும் போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப்பாடத்துறையை சிங்கள மொழி/ தமிழ் மொழி பாடம் இல்லாமல் கலைத்துறையில் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் வணிக பாடத்துறையை கற்ற விண்ணப்பதாரர்களுக்கு வரிசைப்படி முன்னுரிமை பெறும் விதத்தில் தேசிய மட்டத்தில் எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்காக விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **03** | - | **விஞ்ஞானம் (சிங்களம்)** |
| | **04** | - | **விஞ்ஞானம் (தமிழ்)** |
| | **05** | - | **விஞ்ஞானம் (ஆங்கிலம்)** |

4.2

4.2.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில்நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பௌதீகம், இரசாயனவியல் மற்றும் உயிரியல் போன்ற உயிரியல் பாடத்துறை சார்ந்த மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.2.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

**விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக :**

இந்த பாடத்துறைக்காக ஆட்சேர்க்கும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 80% அளவினர் க.பொ.த. (உயர்தரம்) ஆங்கில மொழிமூலம் கற்ற விண்ணப்பதாரர்களும் எஞ்சிய 20% அளவினர் க.பொ.த. (உயர்தர) சிங்களம்/தமிழ் மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கும் வகையில் தெரிவு செய்யப்படுவர். (சிங்களம்/தமிழ் மொழிமூலம் க.பொ.த. (உயர்தர) கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளும் போது, அவர்களிடையே க.பொ.த. (சாதாரண தர) ஆங்கில மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உரித்தாகும்) இங்கு க.பொ.த. (உயர்தர) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் சேர்த்துக்கொள்ளும் அடிப்படையின் கீழ் க.பொ.த. (உயர்தர) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கிடையில் எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **06** | - | **கணிதம் (சிங்களம்)** |
| | **07** | - | **கணிதம் (தமிழ்)** |
| | **08** | - | **கணிதம் (ஆங்கிலம்)** |

*4.3*

*4.3.1* 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பௌதீக விஞ்ஞான பாடத்துறைகளை சார்ந்த பாடங்கள் மூன்றில் (03) இல் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

*4.3.2* 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

**கணிதம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக :**

இந்த பாடத்துறைக்காக ஆட்சேர்க்கும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 80% அளவினர் க.பொ.த. (உயர் தரம்) ஆங்கில மொழிமூலம் கற்ற விண்ணப்பதாரர்களும் எஞ்சிய 20% அளவினர் க.பொ.த. (உயர்தர) சிங்களம்/தமிழ் மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கலாகும் வகையில் தெரிவு செய்யப்படுவர். (சிங்களம்/தமிழ் மொழிமூலம் க.பொ.த. (உயர்தர) கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளும் போது, அவர்களிடையே க.பொ.த. (சாதாரண தர) ஆங்கில மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உரித்தாகும்) இங்கு க.பொ.த. (உயர்தர) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் சேர்த்துக்கொள்ளும் அடிப்படையின் கீழ் க.பொ.த. (உயர்தர) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கிடையில் எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **09** | - | **சமூக விஞ்ஞானம் (சிங்களம்)** |
| | **10** | - | **சமூக விஞ்ஞானம் (தமிழ்)** |

*4.4*

*4.4.1* 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் வரலாறு, புவியியல், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் போன்ற பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்துடன் கலைப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

*4.4.2* 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் பொருளியல் பாடத்துடன்வணிகப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

*4.4.3* 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் புவியியல் பாடத்துடன் "வேறு" பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

*4.4.4* 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் வரலாறு/குடியுரிமைக் கல்வி/ புவியியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

*4.4.5* இந்த பாடத்துறைக்காக சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 60% வீதம் 4.4.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும், 30% வீதம் 4.4.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும், 10% வீதம் 4.4.3. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கும்

வகையில் தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதிய தகைமை பெற்றோர் எண்ணிக்கை போதுமானளவு இல்லாத சந்தர்ப்பங்களில் 4.4.1, 4.4.2, 4.4.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு வரிசை அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் எஞ்சிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

| பாடநெறி இலக்கம் | 11 | - | பௌத்த தர்மம் (சிங்களம்) |
|---|---|---|---|

பௌத்த தர்ம பாடநெறிக்கு புத்த பிக்குகள், பெண் துறவிகள், புத்தசாசன அமைச்சின் கீழ் உள்ள பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தசசில் மாதாக்கள், மற்றும் துறவறம் சாராத விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்க முடியும்.

4.5

4.5.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பௌத்த தர்மம், பௌத்த நாகரிகம், பாலி, சமஸ்கிருதம் மற்றும் சிங்களம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் (02) உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.5.2 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் பௌத்த தர்ம பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்/அடிப்படை பிரிவெனா இறுதி பரீட்சையின்போது 3.0 இல் 3.3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

அத்துடன்

4.5.3 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.5.4 பிராச்சீன ஆரம்ப பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.5.5 அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.5.6 மதகுருமார்களுக்காக சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி (நிட்டம்புவ) ஒதுக்கப்பட்டுள்ளது. தகைமை பெற்ற பிக்குணிமார்கள் அல்லது தசசில் மாதாக்கள் உள்ளார்கள் எனின் மதகுருமார் அடிப்படையில் சேர்க்கப்பட்டு, சாரிபுத்த கல்வியியற் கல்லூரிக்கு (தும்பதெனிய) அனுப்பப்படுவார்கள்.

4.5.7 மதகுருமார் விண்ணப்பதாரரிடையே 2021 க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற துறவற விண்ணப்பதாரிகள் போதிய தொகையில் இல்லாவிடில் 2020, 2019, 2018, 2017 எனும் வருடங்களிலும், 2022 க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற துறவற விண்ணப்பதாரிகள் போதிய தொகையில் இல்லாவிடில் 2021, 2020, 2019, 2018 எனும் வருடங்களிலும், தொடரொழுங்கில் அண்மித்த வருடங்களில் க.பொ.த. (உயர்தர.) சித்தி பெற்ற மதகுருமார்களுக்கு முன்னுரிமை கிடைக்குமாறு தேவையான எஞ்சிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.

4.5.8 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், மதகுருமார்களுக்கான வெற்றிடங்களுக்கு போதிய எண்ணிக்கையில் குருமார்களிடமிருந்து விண்ணப்பதாரர்கள் இல்லாதபோது, மீதமுள்ளவர்கள் சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரிக்கு (தும்பதெனிய) துறவறம் பூணாத சாதாரண விண்ணப்பதாரர்களிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

4.5.9 **தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை**

(அ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.3 சான்றிதழ்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(ஆ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.4 சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(இ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.5 சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(ஈ) 4.5.1 மற்றும் 4.5.2 சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்

| **பாடநெறி இலக்கம்** | **12** | - | **இந்து சமயம் (தமிழ்)** |
|---|---|---|---|

4.6

4.6.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் இந்து சமயம், இந்து நாகரிகம், மற்றும் சமஸ்கிருதம் போன்ற பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.6.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் சைவநெறி பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

உள்ளடங்கலாக

4.6.3 சைவ சித்தாந்த பண்டிதர் சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது/மற்றும்

4.6.4 சைவப் புலவர் சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது/மற்றும்

4.6.5 இளம் சைவ புலவர் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.6.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.6.1, 4.6.2 மற்றும் ஏனைய அனைத்து சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.6.1, 4.6.2, 4.6.5 மற்றும் ஏனைய சான்றிதழ் இரண்டில் ஒன்றை பெற்ற விண்ணப்பதாரர்கள்
(இ) 4.6.1, 4.6.2 மற்றும் ஏனைய சான்றிதழ் மூன்றில் ஒன்றை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.6.1, 4.6.2 சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள்

| **பாடநெறி இலக்கம்** | **13** | - | **இஸ்லாம் (தமிழ்)** |
|---|---|---|---|

4.7

4.7.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் மற்றும் அரபு போன்ற பாடங்களில் ஒன்றுடன் மூன்று பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.7.2 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இஸ்லாம் சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

உள்ளடங்கலாக

4.7.3 அல் ஆலிம் பரீட்சையில் (ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் மற்றும் இறுதி பரீட்சையில் சகல பாடங்களிலும் ஆகிய இரண்டிலும்) சித்தி பெற்றிருத்தல்

அல்லது

4.7.4 அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.7.5 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்

4.7.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.7.1, 4.7.2, 4.7.3 மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.7.1, 4.7.2, 4.7.4 மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(இ) 4.7.1, 4.7.2, மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(ஈ) 4.7.1, மற்றும், 4.7.2 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **14** | - | **கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம் (சிங்களம்)** |
| | **15** | - | **கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம் (தமிழ்)** |

4.8

4.8.1

4.8.1.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.8.1.2 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் கத்தோலிக்க சமய/கிறிஸ்தவ சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.8.1.3 விண்ணப்பதாரர்கள் கத்தோலிக்க சமயத்தில் விசுவாசம் உடையவர் என்பதற்கான கத்தோலிக்க ஆயர் பதவிச் சான்றிதழ்/கிறிஸ்தவ சமயத்தில் விசுவாசம் என்பதற்கான தேசிய கிறிஸ்தவ சபையின் சான்றிதழ் பெற்றிருத்தல்

உள்ளடங்கலாக

4.8.2 கத்தோலிக்க சமய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் பின்வரும் தகைமைகளுக்கு வரிசை அடிப்படையில் முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்படும்.

4.8.2.1 தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பான நான்கு வருட பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்

4.8.2.2 தேசிய குருத்துவக் கல்லூரியில் தத்துவம் தொடர்பான பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்

4.8.2.3 இறையியல் கல்லூரியில் மூன்று வருட சமயக் கல்வி தொடர்பான பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்

4.8.2.4 துறவி/ துறவிப்பெண் ஆகுவதற்கான சமயக்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறி (Novitiate) சிறந்த முறையில் கற்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதற்காக துறவற சபையின் நிறுவனத் தலைவரினால்/ தலைவியினால் அல்லது உரிய மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.8.2.5 தேசிய மறைக்கல்வி மையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க அறநெறி ஆசிரியர் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அதாவது,
மறைநெறி ஆசிரியர் (03) (இறுதி)

அல்லது

மறைநெறி ஆசிரியர் (02) (மத்திய)

அல்லது

மறைநெறி ஆசிரியர் (01) (ஆரம்ப)

4.8.2.6 க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கிறிஸ்தவ சமயம்/கிறிஸ்தவ நாகரிக பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்

4.8.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் தொடரொழுங்கு அடிப்படையில் பின்வரும் தகைமைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

4.8.3.1 பிலிமத்தலாவ இலங்கை இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் இறையியல் பட்டதாரி சான்றிதழை பெற்றிருத்தல்.

4.8.3.2 பிலிமத்தலாவ இலங்கை இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் இறையியல் டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல்.

4.8.3.3 தேசிய கிறிஸ்தவ சபை ஊடாக நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (தர்மாசிரியர்) பெற்றிருத்தல்

4.8.3.4 க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கிறிஸ்தவ சமயம்/கிறிஸ்தவ நாகரிகம் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்

**கவனத்திற் கொள்க :-**

(i) சேர்த்துக்கொள்ளப்படும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 40% வீதம் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மத குருமார்களின் தகைமை வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். 40% வீதம் மதகுருமார் எண்ணிக்கையினர் முன்வராத பட்சத்தில் அந்த வெற்றிடங்களுக்கு துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) சேர்த்துக்கொள்ளப்படும் முழு துறவறம் சாரா விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 85% வீதம் 4.8.1. இன் கீழ் தகைமை பெறும் கத்தோலிக்க துறவறம் சாரா விண்ணப்பதாரர்களிடையில் 4.8.2. இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுள் தொடரொழுங்கு அடிப்படையை மையமாக வைத்து தெரிவு செய்யப்படும். 85% வீதம் பூர்த்தி செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட கத்தோலிக்க துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் இல்லையெனில் அந்த வெற்றிட எண்ணிக்கை கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

(iii) சேர்த்துக்கொள்ளப்படும் முழு துறவறம் சாரா விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 15% வீதம் 4.8.1. இன் கீழ் தகைமை பெறும் கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரர்களிடையில் 4.8.3. இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுள் தொடரொழுங்கு அடிப்படையை மையமாக வைத்து தெரிவு செய்யப்படும். 15% வீதம் பூர்த்தி செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் இல்லையெனில் அந்த வெற்றிட எண்ணிக்கை கத்தோலிக்க துறவறம் சாரா விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

(iv) கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் பொதுவாக அவர்களின் Z புள்ளியின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகளில் 15% வீதம் சேர்த்துக்கொள்ளப்படும் மாவட்டம் எது என்பதை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் அதிக Z புள்ளி கொண்ட கிறிஸ்தவ விண்ணப்பதாரிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட அடிப்படையிலும் அங்கு நிலவும் வெற்றிட எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டும் தீர்மானிக்கப்படும்.

(v) 2021 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) சித்திபெற்ற மதகுருமார்களில் உரிய தகைமைகளோடு கூடிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமானளவு இல்லாதவிடத்து 2020, 2019, 2018, 2017 ஆம் வருடங்களிலும் 2022 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற மதகுருமார்களில் உரிய தகைமைகளோடு கூடிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமானளவு இல்லாதவிடத்து 2021, 2020, 2019, 2018 ஆம் வருடங்களிலும் தொடரொழுங்கின் அண்மித்த வருடங்களில் க.பொ.த. (உயர்தர) சித்திபெற்ற மதகுருமார்களுக்கு முன்னுரிமை கிடைக்குமாறு தேவையான எஞ்சிய விண்ணப்பதாரர் எண்ணிக்கையினர் தெரிவு செய்யப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **16** | - | **முதலாவது மொழி (சிங்களம்)** |

4.9

4.9.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.9.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள மொழியும் இலக்கியமும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

| பாடநெறி இலக்கம் | 17 | - | முதலாவது மொழி (தமிழ்) |
|---|---|---|---|

4.10

4.10.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் தமிழ் மொழிப்பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில்சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.10.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

| பாடநெறி இலக்கம் | 18 | - | ஆங்கிலம் |
|---|---|---|---|

4.11

4.11.1

4.11.1.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழி (பாட எண் 73) உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.11.1.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியும்/ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

4.11.2

4.11.2.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.11.2.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியும் ஆங்கில மொழிப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.11.3

4.11.3.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர் தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களுடன் சாதாரண ஆங்கிலப் பாடம் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.11.3.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

ஆட்சேர்க்கும் போது 4.11.1 இன் கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களின் Z புள்ளி பெறுமானத் தொடரொழுங்கு அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை பூர்த்தியாக்கப்படுவதற்கு அந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின் 4.11.2 இன் கீழ் விண்ணப்பித்த தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும். உரிய ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு அந்த எண்ணிக்கையும் போதாதெனில் 4.11.3 இன் கீழ் விண்ணப்பித்த தகைமைகளோடு கூடிய விண்ணப்பதாரிகள் அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.11.4 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(i) 4.11.1 இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை வழங்கி தெரிவு செய்யப்படுவர்.

(ii) இதற்கு அப்பால் மேலும்நிலவும் வெற்றிடங்கள் *4.11.2* இல் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் அவர்கள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்தில் பெற்ற தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி மற்றும் அதனுடன் Z புள்ளியையும் ஒப்பிட்டு தெரிவு செய்யப்படும்.

(iii) மேலே இலக்கம் (ii) இன் கீழ் தெரிவு செய்த பின்பு மேலும் வெற்றிடங்கள் நிலவுமெனில் *4.11.3* இல் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள், அவர்கள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திற்கு பெற்றுக்கொண்ட தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி மற்றும் அதனுடன் Z புள்ளியையும் ஒப்பிட்டு தெரிவு செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | ***19*** | - | ***சித்திரம் (சிங்களம்)*** |
| | ***20*** | - | ***சித்திரம் (தமிழ்)*** |

*4.12*

*4.12.1* *2021* ஆம் ஆண்டில் அல்லது *2022* ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்திர பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

*4.12.2* *3.0* இல் *3.3.1* இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்திர பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

*4.12.3* *4.12.1* மற்றும் *4.12.2* தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கிடையில் இருந்து *3.7* பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | ***21*** | - | ***நடனம் (கீழைத்தேய)*** |

*4.13*

*4.13.1* *2021* ஆம் ஆண்டில் அல்லது *2022* ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நடனம் (கீழைத்தேய) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

*4.13.2* *3.0* இல் *3.3.1* இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நடனம் (கீழைத்தேய) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

*4.13.3* *4.13.1* மற்றும் *4.13.2* தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து *3.7* பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | ***22*** | - | ***நடனம் (பரதம்)*** |

*4.14*

*4.14.1* *2021* ஆம் ஆண்டில் அல்லது *2022* ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

*4.14.2* *3.0* இல் *3.3.1* உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

*4.14.3* *4.14.1* மற்றும் *4.14.2* தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து *3.7* பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| பாடநெறி இலக்கம் | 23 | - | சங்கீதம் (கீழைத்தேய) |
|---|---|---|---|

4.15

4.15.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேய) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.15.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேய) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.15.3 4.15.1 மற்றும் 4.15.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து 3.7 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| பாடநெறி இலக்கம் | 24 | - | சங்கீதம் (கர்நாடகம்) |
|---|---|---|---|

4.16

4.16.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.16.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.16.3 4.16.1 மற்றும் 4.16.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து 3.7 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| பாடநெறி இலக்கம் | 25 | - | மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்) |
|---|---|---|---|

4.17

4.17.1

4.17.1.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீத பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.1.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேற்கத்தேய சங்கீத பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.17.2

4.17.2.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.2.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தியுடன் மற்றும் மேற்கத்தேய சங்கீத பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.17.2.3 கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/கல்விச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பான 05வது வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் (கோட்பாடு மற்றும் பிரயோகம்)

அல்லது

4.17.3

4.17.3.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.3.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தியுடன் மற்றும் மேற்கத்தேய சங்கீத பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.3.3 க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீத பாடத்தை மேலதிக பாடமாக திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.17.4

4.17.4.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.17.4.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீத பாடத்தில் விசேட சித்தியும் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

(i) மேற்கத்தேய சங்கீத பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்திற்கு அண்மித்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும்போது மேலே 4.17.1, 4.17.2, 4.17.3, 4.17.4 வரிசைக்கிரமப்படி முன்னுரிமை வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **26** | - | **நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)** |
| | **27** | - | **நாடகமும் அரங்கியலும் (தமிழ்)** |

4.18

4.18.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.18.2 3.0 இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி பெற்றிருத்தல்

4.18.3 4.18.1 மற்றும் 4.18.2 இல் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.7 இல் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **28** | - | **சுகாதாரமும் உடற்கல்வி (சிங்களம்)** |
| | **29** | - | **சுகாதாரமும் உடற்கல்வி (தமிழ்)** |
| | **30** | - | **சுகாதாரமும் உடற்கல்வி (ஆங்கிலம்)** |

4.19

4.19.1. 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.19.2 3.0 இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

4.19.3 அங்கீகரிக்கப்பட்ட தடகள மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் சம்பந்தமான தேர்ச்சிகள்/ திறமைகள் பெற்றிருத்தல் (இதன் கீழ் வேறுபட்ட விளையாட்டுக்கள்/ நிகழ்ச்சிகள் மூன்றுக்கு சமர்ப்பிக்கின்ற சான்றிதழ்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு 4.19.3.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய ஆகக்கூடுதலாக 75 புள்ளிகள் வழங்கப்படும்).

4.19.3.1 விளையாட்டுக்கள்/நிகழ்ச்சிகளுக்காக புள்ளிகள் வழங்கப்படுவதற்குரிய முன்னுரிமைத் தொடரொழுங்கு கீழே காட்டப்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களின் பெயர்ப் பட்டியல் 4.19.5–X அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**விளையாட்டு /நிகழ்ச்சி முன்னுரிமை தொடரொழுங்கு**

| தொடர் இல | மட்டம்/விடயம் | தனி | குழு | இடம்/தரம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | சர்வதேச மட்டம் | தனி | – | 1 | 25 |
| 02 | சர்வதேச மட்டம் | தனி | – | 2 | 24 |
| 03 | சர்வதேச மட்டம் | தனி | – | 3 | 23 |
| 04 | சர்வதேச மட்டம் | – | குழு | 1 | 24 |
| 05 | சர்வதேச மட்டம் | – | குழு | 2 | 23 |
| 06 | சர்வதேச மட்டம் | – | குழு | 3 | 22 |
| 07 | சர்வதேச தேசிய பிரதிநிதி | தனி | குழு | – | 21 |
| 08 | தேசிய மட்டம் | தனி | – | 1 | 20 |
| 09 | தேசிய மட்டம் | தனி | – | 2 | 19 |
| 10 | தேசிய மட்டம் | தனி | – | 3 | 18 |
| 11 | தேசிய மட்டம் | – | குழு | 1 | 19 |
| 12 | தேசிய மட்டம் | – | குழு | 2 | 18 |
| 13 | தேசிய மட்டம் | – | குழு | 3 | 17 |
| 14 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பாடசாலை விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் தேசிய விளையாட்டு போட்டி | தனி | – | 1 | 16 |
| 15 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் தேசிய விளையாட்டு போட்டி | தனி | – | 2 | 15 |
| 16 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் தேசிய விளையாட்டு போட்டி | தனி | – | 3 | 14 |
| 17 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் தேசிய விளையாட்டு போட்டி | - | குழு | 1 | 15 |
| 18 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் தேசிய விளையாட்டு போட்டி | - | குழு | 2 | 14 |
| 19 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் தேசிய விளையாட்டு போட்டி | - | குழு | 3 | 13 |
| 20 | மாகாண மட்டம் | தனி | – | 1 | 16 |
| 21 | மாகாண மட்டம் | தனி | – | 2 | 15 |

| தொடர் இல | மட்டம்/விடயம் | தனி | குழு | இடம்/தரம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 22 | மாகாண மட்டம் | தனி | - | 3 | 14 |
| 23 | மாகாண மட்டம் | - | குழு | 1 | 15 |
| 24 | மாகாண மட்டம் | - | குழு | 2 | 14 |
| 25 | மாகாண மட்டம் | - | குழு | 3 | 13 |
| 26 | றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர் / அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் 1 (இராணுவ/ காவல்துறை)/ குழு பிரதம சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை) / பிரதான அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (விமானப்படை)/ ஹர்மன் லோஸ் கிண்ண வெற்றியாளர்/ டி.சொய்ஸா கிண்ண வெற்றியாளர் / மாணவர் படையணி (கெடெட்) கீழைத்தேயம் / மேற்கத்தேய பாண்ட் வாத்தியம் (ஆண்/பெண்) வெற்றியாளர் | - | - | - | 10 |
| 27 | ஜனாதிபதி சாரணியமும்/ பெண் சாரணியமும் | - | - | - | 10 |
| 28 | சாஜன்ட மேஜர் /அதிகாரம் அளிக்கப் பட்ட உத்தியோகத்தர் 11 (இராணுவம்/ காவல்துறை)/ நிர்வாக சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை) /அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (விமானப்படை) / ஹர்மன் லோஸ் கிண்ண இரண்டாவது வெற்றியாளர்/ டி.சொய்ஸா கிண்ண இரண்டாவது வெற்றியாளர் / மாணவர் படையணி (கெடெட்) கீழைத்தேயம்/மேற்கத்தேய பாண்ட் வாத்தியம் (ஆண்/ பெண்) இரண்டாவது வெற்றியாளர் | - | - | | 09 |
| 29 | கல்வி வலய மட்டம் /மாவட்ட மட்டம் | தனி | - | 1 | 10 |
| 30 | கல்வி வலய மட்டம் /மாவட்ட மட்டம் | தனி | - | 2 | 09 |
| 31 | கல்வி வலய மட்டம் /மாவட்ட மட்டம் | தனி | - | 3 | 08 |
| 32 | கல்வி வலய மட்டம் /மாவட்ட மட்டம் | - | குழு | 1 | 09 |
| 33 | கல்வி வலய மட்டம் /மாவட்ட மட்டம் | - | குழு | 2 | 08 |
| 34 | கல்வி வலய /மாவட்ட மட்டம்/பதவியணி சார்ஜன்ட் (Staff Sergeant) (இராணுவ/ காவல்துறை) / பிரதம சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை) /அதிகாரம் அளிக்கப்பட்ட சார்ஜன்ட் உத்தியோகத்தர் (விமானப்படை) / ஹர்மொன் லோஸ் கிண்ண மூன்றாவது நிலை / டி. சொய்ஸா கிண்ண மூன்றாவது நிலை | - | குழு | 3 | 07 |
| 35 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | | 1 | 06 |
| 36 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | | 2 | 05 |
| 37 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | | 3 | 04 |

| தொடர் இல | மட்டம்/விடயம் | தனி | குழு | இடம்/தரம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 38 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | | குழு | 1 | 05 |
| 39 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம்/பற்றாலியன் வெற்றியாளர் (ஆண் பற்றாலியன் 29/பெண் 09) | | குழு | 2 | 04 |
| 40 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | | குழு | 3 | 03 |

4.19.4 க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் விஞ்ஞான பாடத்திற்கு பெற்றுக்கொண்டுள்ள சித்திக்கு அமைய கீழே காட்டப்பட்டுள்ள வகையில் மேலதிக புள்ளிகள் உரித்தாவதோடு அவை விளையாட்டுச் சான்றிதழ்களுக்குரிய புள்ளிகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டு மொத்த விளையாட்டு புள்ளிகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்.

A சித்தி- 05
B சித்தி - 03
C சித்தி - 02
S சித்தி - 01

4.19.5 கீழ்க்காணப்படும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்:

(i) உடற்கல்வி பாடநெறிக்கு தெரிவு செய்யும்போது ஒவ்வொரு விண்ணப்பதாரர்களினது முழுமையான விளையாட்டு திறமை புள்ளி வரிசைக் கிரமப்படி கீழே காட்டப்பட்டுள்ள செயன்முறையின்படி தேரந்தெடுக்கப்படுவர். (4.19.3.1 அட்டவணை மற்றும் 4.19.4 அதற்காக உரியதாகும்)

(ii) ஆட்சேர்க்கும் போது தடகள விளையாட்டுப் போட்டிக்கான குழு இலக்கம் 01 இன் கீழ் 30% உம் கரப்பந்து (Volley ball), வலைப்பந்து (Net Ball) மற்றும் காற்பந்து (Foot ball) போன்ற விளையாட்டுக்களின் குழு இலக்கம் 02 இன் கீழ் 30% ம் மற்றும் 4.19.5 –X இன் கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பிறிதும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களின் குழு இலக்கம் 03 இன் கீழ் 40% உம் ஆகுமாறு விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கும் போது குழு இலக்கம் 1, 2, 3 எனும் தொடரொழுங்கில் முன்னுரிமை பெறுமாறு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(iii) விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் நியதிகளுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படுவதோடு,ஒவ்வொருகுழுவின் கீழ் வெவ்வேறாக ஈட்டிக்கொண்ட புள்ளிகளுக்கிடையில் உயரிய (highest) புள்ளிப் பெறுமதி உரியதான குழுவின் அடிப்படையில் விண்ணப்பதாரி உரித்தாகும் குழு இலக்கம் தீர்மானிக்கப்பெறும். யாதேனும் விண்ணப்பதாரி ஒருவர் குழு இலக்கம் 02 அல்லது குழு இலக்கம் 03 இன் கீழ் உயரிய சம மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருப்பின் குழுவைத் தெரிவு செய்யும் போது அவரின் விருப்பம் கருத்திற்கொள்ளப்படும். அதன்போது ஒவ்வொரு குழுவின் கீழும் முன்வைக்கப்படும் உயரிய சான்றிதழுக்கு சமமான புள்ளி பெறப்படுமாயின் குழு இலக்கம் 01, 02, 03 எனும் தொடரொழுங்குக்கு அமைய முன்னுரிமை கிடைக்குமாறு விண்ணப்பதாரிகள் குழுக்களாக்கப்படுவர்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (சர்வதேச மட்டம்) – கல்வியமைச்சு / விளையாட்டு அமைச்சு மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகங்களுக்கு ஊடாக (செஸ், கரம், தாம் ஆட்டம் தவிர) இலங்கை தேசிய விளையாட்டுக் குழுவினை அல்லது பாடசாலை தேசிய விளையாட்டுக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்கேற்கும் சர்வதேச மட்டத்திலான போட்டிகள் இதற்காக செல்லுபடியாகும். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது). **மேலும் சர்வதேச போட்டிச் சான்றிதழ்கள் கருத்திற் கொள்ளப்படுவது குறைந்த பட்சம் உரிய விளையாட்டுக்காக தேசிய மட்ட போட்டியில் முதலாம், இரண்டாம், அல்லது மூன்றாம் இடம் பெற்றிருந்தால் மாத்திரமே. அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்ற அல்லது சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்க, உரிய தேசிய அணிக்கான தெரிவு செய்ய சோதிப்பதற்கான அழைப்புக் கடிதம் மற்றும் தேர்வு செய்யப்பட்டதாக தேசிய சங்கம் அளித்த கடிதத்தை நேர்முகப்பரீட்சை குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம்.**

(v) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (தேசிய மட்டம்) - கல்வி அமைச்சு /விளையாட்டு அமைச்சு /தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும் மாகாணக் கல்வித் திணைக்களம் /மாகாண விளையாட்டு அமைச்சு /தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும் மாகாண விளையாட்டு அமைச்சு/ தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான /பிரதேச செயலாளர் பிரிவிலான விளையாட்டுப் போட்டிகள் /மாகாண கல்வி திணைக்களம் மூலமாக ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கல்விக் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும், இதற்காக செல்லுபடியாகும்.

(vi) விளையாட்டு அமைச்சில் மற்றும் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட "A" தர குழுக்களுக்கான போட்டிகளில் 1 ஆம், 2 ஆம் மற்றும் 3 ஆம் இடங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அப் போட்டிகளில் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(vii) 2021 க.பொ.த. (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் விண்ணப்பிப்பவர்களுக்காக 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் 2021.12.31 ஆந் திகதி வரை பெற்றுக் கொண்ட விளையாட்டு வெற்றி சான்றிதழ்களும் 2022 க.பொ.த. (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் விண்ணப்பிப்பவர்களுக்காக 2018.01.01 திகதி தொடக்கம் 2022.12.31 திகதி வரை பெற்றுக் கொண்ட விளையாட்டு வெற்றி சான்றிதழ்களும் இதற்காக செல்லுபடியானதாகும்.

(**கவனத்திற் கொள்ள வேண்டியவை** : இக் காலப்பகுதிக்கு முன்னர் மற்றும் பின்னர் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்காக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு முன்வைக்கப்படும் அனைத்து சான்றிதழ்களும் உண்மைத்தன்மைக்காக அதற்குரிய நிறுவனத்தால் உறுதிபடுத்தப்படல் வேண்டும்).

(viii) அக் காலப்பகுதிக்குரிய விண்ணப்பதாரிகளின் உயரிய திறன் ஆற்றல் காண்பிக்கப்பட்டுள்ள விளையாட்டின் வெற்றிச் சான்றிதழ்கள் மூன்றிற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படுவதோடு நேர்முகப் பரீட்சைத் தினத்தில் உரிய அனைத்து சான்றிதழ்களையும் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

(ix) அவ்வாறு புள்ளிகள் உரித்தாவது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் உயரிய சான்றிதழ் ஒன்றுக்கு மட்டுமான வகையில் ஆகும்.

(x) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது கருத்திற் கொள்ளப்படும் விளையாட்டு அமைச்சின் மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் பாடசாலை விளையாட்டுக் கழகங்களுக்குரிய விளையாட்டுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| பூப்பந்து (Badminton) | டைக்குவாண்டோ | மல்யுத்தம் | வலைப்பந்து |
| நீர் விளையாட்டுக்கள் (நீச்சல்) | எறிபந்து (துரோ போல்) | கூடைப்பந்து | வூஸ்சு |
| ஜூடோ | ரக்பி | மென்பந்து கிரிக்கட் | டெனிஸ் |
| சைக்கிள் ஓட்டம் | பாரம் தூக்கல் | கரப்பந்து | குத்துச்சண்டை |
| எல்லே | காற்பந்து | தடகள விளையாட்டு | கபடி |
| கொக்கி | ஜிம்னாஸ்டிக் | கிரிக்கட் | பேஸ்போல் |
| கராத்தே | மேசைப்பந்து | கரப்பந்து | உடற் பயிற்சிகள் |
| சதுரங்கம் | கேரம் | | |

கவனத்திற் கொள்க.-

I. சுகாதாரம் மற்றும் உடற்கல்வி பாடநெறிக்காக நடைபெறும் பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான உடல் தகுதி மட்டத்தை காட்டி இருக்க வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் தெரிவின் போது எண். 1, 2 மற்றும் 3 குழு தொடரொழுங்கு வரிசைப்படி முன்னுரிமை வழங்கப்படும்.

III. தெரிவு செய்யப்பட தகுதிபெற, மொத்த விளையாட்டுப் புள்ளிகள் 10 இற்கு மேல் இருக்க வேண்டும். வெற்றிடங்கள் இருந்தாலும் விளையாட்டு புள்ளி 10 அல்லது அதற்கும் குறைவாக இருந்தால், அவர் தெரிவுக்கு தகுதியற்றவர்.

IV. பாடசாலை விளையாட்டு சங்கங்கள் அல்லது தேசிய விளையாட்டு சங்கங்கள் நடாத்தும் போட்டிகள் வெவ்வேறு நிலைகளில் நடத்தப்பட்டாலும், அந்தந்த போட்டிகளுக்காக நடத்தப்படும் உயர்நிலை போட்டிகளில் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு மட்டுமே நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **31** | **-** | **மனைப் பொருளியல் (சிங்களம்)** |
| | **32** | **-** | **மனைப் பொருளியல் (தமிழ்)** |

4.20

4.20.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மனைப்பொருளியல் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

4.20.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விஞ்ஞான பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **33** | **-** | **விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (சிங்களம்)** |
| | **34** | **-** | **விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ்)** |

4.21

4.21.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.21.2 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தொழில் நுட்பவியல் பிரிவில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களில ஒரே அமர்வில்சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.21.3 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப் பாடப்பிரிவில் விவசாய விஞ்ஞானம்/ விவசாயத் தொழில்நுட்பவியல் / உயிரியல் வளத் தொழில்நுட்பவியல் / உணவுத் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஒன்று உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.21.4 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விஞ்ஞானம் பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

**கவனத்திற் கொள்க :**

- பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவது எண்ணிக்கையின் 50% ஆனவர்கள் 4.21.1. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருந்தும், 25% ஆனவர்கள் 4.21.2. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருந்தும், எஞ்சிய 25% ஆனவர்கள் 4.21.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருக்குமாறு தெரிவு செய்யப்படுவர்.

- எந்தவொரு பாடத்தொகுதியின் கீழும் போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து 4.21.1, 4.21.2, 4.21.3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு அமைய வரிசைக்கிரம அடிப்படையில் முன்னிலைப்படுத்தி எஞ்சிய வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **35** | - | **தொழில்நுட்ப கற்கை - நுட்பக்கலை (சிங்களம்)** |
| | **36** | - | **தொழில்நுட்ப கற்கை - நுட்பக்கலை (தமிழ்)** |

4.22

4.22.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

4.22.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நுட்பக்கலை பாடத்திற்கு திறமை சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **37** | - | **வடிவமைப்பும் நிர்மாணத் தொழில்நுட்பவியலும் (சிங்களம்)** |
| | **38** | - | **வடிவமைப்பும் இயந்திரத் தொழில்நுட்பவியலும் (சிங்களம்)** |
| | **39** | - | **வடிவமைப்பும் மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பவியலும் (சிங்களம்)** |
| | **40** | - | **வடிவமைப்பும் நிர்மாணத் தொழில்நுட்பவியலும் (தமிழ்)** |
| | **41** | - | **வடிவமைப்பும் இயந்திரத் தொழில்நுட்பவியலும் (தமிழ்)** |
| | **42** | - | **வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலும் (தமிழ்)** |

4.23

4.23.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைக்கான மூன்றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.23.2 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் வன்பொருள் தொழில்நுட்பவியல் பாட பிரிவில் குடிசார் தொழில்நுட்பவியல், பொறிமுறைத் தொழில் நுட்பவியல், மின் இலத்திரனியல், மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.23.3 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

மிகவும் விசேடமானது :

(i) இந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினால் இந்தப் பாடநெறியைக் கற்பதற்காக தாம் கொண்டுள்ள தகைமைகள் தொடர்பாக விஷேட கவனத்தைச் செலுத்தி அதற்கமைய தமது விருப்பத்திற் கேற்ப, சிங்கள மொழி மூல விண்ணப்பதாரிகளினால் பாடநெறி இலக்கம் 37, 38 மற்றும் 39 வரையுள்ள பாடநெறிகளில் ஒன்றுக்கோ அல்லது சிலவற்றுக்கோ, தமிழ்மொழி மூல விண்ணப்பதாரிகளினால் பாடநெறி இலக்கம் 40, 41 மற்றும் 42 வரையான பாடநெறிகளில் ஒன்றுக்கோ அல்லது சிலவற்றுக்கோ என்றவாறாக உரிய மொழி மூலத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) இதற்காக விண்ணப்பிக்கும் போது தம்மால் உரிய மொழி மூலத்தில் விண்ணப்பிக்கப்படும் பாடநெறி இலக்கம் சரியாக உள்ளிடப்பட வேண்டும்.

(iii) ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் இலக்கம் 4.23.1 அல்லது 4.23.2 தகுதிகளின் படி விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளிடமிருந்து அவர்களின் Z புள்ளிப் பெறுமான தொடரொழுங்கின் படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை கீழ்க்காணும் தொடரொழுங்கின்படி தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

4.23.4 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.23.1., 4.23.3 தகைமையுள்ள விண்ணப்பதாரிகள்

(ஆ) 4.23.2., 4.23.3 தகைமையுள்ள விண்ணப்பதாரிகள்

| பாடநெறி இலக்கம் | 43 | - | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்) |
|---|---|---|---|

4.24

4.24.1

4.24.1.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.24.1.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.24.2

4.24.2.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.24.2.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச்சித்தி/ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன்சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.24.3

4.24.3.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பௌதிக விஞ்ஞான பிரிவு பாடங்களில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.24.3.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தி /ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன்சித்தியடைந்திருத்தல்

4.24.3.3 12வது தரத்தில் பொதுத் தகவல் தொழில்நுட்பத் தேர்வில் (GIT) சித்தி பெற்ற தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் Z புள்ளிதொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு இந்தப் பிரிவில் தொகுதியினர் செய்ய முன்னுரிமை பெறுவார்கள்.

அல்லது

4.24.4

4.24.4.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மூன்று (03) பாடங்களில்ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.24.4.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தி /ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

4.24.4.3 12வது தரத்தில் பொதுத் தகவல் தொழில்நுட்பத் தேர்வில் (GIT) சித்தி பெற்ற தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் Z புள்ளிதொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு இந்தப் பிரிவில் தெரிவு செய்யும் போது முன்னுரிமை பெறுவார்கள்.

4.24.5

அல்லது

4.24.5.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலை, வணிக, தொழில்நுட்பவியல், "வேறு" எனும் யாதேனும் பாடத்துறையின் கீழ் யாதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.24.5.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு விஷேட சித்தியுடன் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

4.24.5.3 12 வது தரத்தில் பொதுத் தகவல் தொழில்நுட்பத் தேர்வில் (GIT) சித்தி பெற்ற தகுதியான விண்ணப்ப தாரர்கள் தங்கள் Z புள்ளி தொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு இந்தப் பிரிவில் தெரிவு செய்யும் போது முன்னுரிமை பெறுவார்கள்.

4.24.6 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குரிய இந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக நேர்முகப் பரீட்சை மற்றும் பாடநெறி நடாத்தப்படுவது ருவான்புர தேசிய கல்வியியற் கல்லூரியிலாகும்.

**கவனத்திற் கொள்க :**

ஆட்சேர்க்கப்படவுள்ள விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை அவர்களின் Z புள்ளி பெறுமானத்துக்கு அமைய கீழ்க் காணும் முறைமைக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

அதன்படி,

(i) 4.24.1 இன் தகைமைகளுடன் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள்

(ii) நிலவும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு 4.24.1 இன் கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமாக இல்லாவிடின் 4.24.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள்.

(iii) வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை மேலும் போதுமானதாக இல்லாவிடின் அதற்காக 4.24.3, 4.24.4 மற்றும் 4.24.5 தொகுதி களின் தொடரொழுங்குப்படி முன்னுரிமை கிடைக்கும்வாறாக தகைமையுள்ள விண்ணப்பதாரிகள்.

4.24.7 தெரிவு செய்யும் முன்னுரிமை தொடரொழுங்கு

(i) Z புள்ளி பெறுமான தொடரொழுங்குப்படி 4.24.1 இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள்

(ii) Z புள்ளி பெறுமான தொடரொழுங்குப்படி 4.24.2 இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள்

(iii) ஒவ்வொரு பாடத்துறையிலும் பொதுத் தகவல் தொழில்நுட்பம் (GIT) சித்தியடைந்தவர்களுக்கு அந்தந்த தொகுதியின் விண்ணப்பதாரர்களிடையே முன்னுரிமை வழங்குமாறு Z புள்ளி தொடரொழுங்கு வரிசையின்படி 4.24.3, 4.24.4, 4.24.5 இன் கீழ் தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், இந்த தொகுதியின் முன்னுரிமை தொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

| பாடநெறி இலக்கம் | 44 | - | இரண்டாம் மொழி (சிங்களம்) |
|---|---|---|---|

*4.25*

*4.25.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழிக்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.25.2 3.0. இல் 3.3.1. இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கிய பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.25.3 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்தில் அல்லது அரச கரும மொழி திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விருப்பத் தமிழ் மொழிப் பாடத்தில் சித்தி.*

**கவனத்திற் கொள்க :**

- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்வது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடம் அல்லது அரச கரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விருப்பத்திற்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு தொடரொழுங்குக்கு அமைய முன்னுரிமை கிடைக்கும் வகையில் Z புள்ளித் தொடரொழுங்குக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

- இந்த பாடநெறிக்காக விண்ணப்பிக்க வேண்டியவர்கள் நாட்டின் யாதேனும் மாவட்டத்தில் தமிழ் மொழி மூல பாடசாலையில் சேவையாற்றுவதற்கு உடன்படுவதாயின் மட்டுமே.

| பாடநெறி இலக்கம் | 45 | - | இரண்டாம் மொழி (தமிழ்) |
|---|---|---|---|

*4.26*

*4.26.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தமிழ் மொழி பாடத்துக்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.26.2 3.0. இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கிய பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.26.3 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் அல்லது அரச கரும மொழி திணைக்களத்தின் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த. (சாதாரண தர) விருப்ப சிங்கள மொழிப் பாடத்தில் சித்தி.*

**கவனத்திற் கொள்க :-**

- *இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்வது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறியில் சித்தியடைந்திருத்தல் அல்லது க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை கிடைக்கும் வகையில் Z புள்ளித் தொடரொழுங்குக்கு அமைய மேற்கொள்ளப்படும்.*

- இந்த பாடநெறிக்காக விண்ணப்பிக்க வேண்டியவர்கள் நாட்டின் எந்தவொரு மாவட்டத்திலும் சிங்கள மொழிமூல பாடசாலையில் சேவையாற்றுவதற்கு உடன்படுவதாயின் மட்டுமே.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **46** | - | **விசேட கல்வி (சிங்களம்)** |
| | **47** | - | **விசேட கல்வி (தமிழ்)** |

4.27

4.27.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.27.2 க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் 3.0. இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

**கவனத்திற் கொள்க :**
இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் விசேட கல்வித் தேவைகளுடைய கேட்டல், பார்வை, மந்தப்புத்தி, ஒடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வித குறைபாடுகளுடன் கூடிய மாணவர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம் பெற்றுத் தரப்படும். எனவே, மேற்கூறப்பட்ட விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற அலகுகளில் கட்டாயம் சேவையாற்றுவதற்கு இணங்கி உடன்படிக்கை செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும். (கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை 42/2012 மற்றும் கல்விச் செயலாளரின் இல ED/9/18/8/2/6 மற்றும் 2017.05.17 திகதிய கடிதத்தின் படியாகும்.)

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **48** | - | **வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (சிங்களம்)** |
| | **49** | - | **வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (தமிழ்)** |

4.28

4.28.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கணக்கியல், வணிகக்கல்வி மற்றும் பொருளியல் எனும் வணிக பாடத்துறைக்குரிய பாடங்கள் மூன்று (03) அல்லது அவற்றில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்றாவது பாடமாக கீழ்க்குறிப்பிட்ட ஒரு பாடத்துடன் பாடங்கள் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

- வர்த்தக புள்ளிவிபரவியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு, அளவையியலும் விஞ்ஞான முறையும், ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, விவசாயம், இணைந்த கணிதம் அல்லது கணிதம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், பௌதிகவியல்

மற்றும்

4.28.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் அல்லது முயற்சியாண்மைக் கல்வி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

5.0 பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் கீழ் அட்டணையில் காட்டப்பட்டுள்ளன.

**கவனத்திற் கொள்க :**

- தொடரறா முறைமை (Online system) ஊடாக விண்ணப்பிக்கும் போது உரிய தகவல்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் யாதேனும் பாடநெறி ஒன்றை கல்வியியற் கல்லூரியில் உசிதமான வகையில் ஆரம்பிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரி நிறுவக சபை/ கல்விச் செயலாளர் வசமானது.

- தொடரறா முறையில் (Online system) விண்ணப்பிக்கும் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் அதில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலத்தில் உரிய பாடநெறி இலக்கத்தை இந்த அட்டவணையில் நிரல் - i இல் குறிப்பிட்டவாறு சரியாக உள்ளிட வேண்டியது கட்டாயமாகும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிரலானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு பெயரிடப்பட்டுள்ளது.

i நிரல் - பாடநெறி இலக்கம்
ii நிரல் - பாடநெறியின் பெயர்
iii நிரல் - சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கை நெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்
iv நிரல் - தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கை நெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்
v நிரல் - ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கை நெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்.

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| i | ii | iii | iv | v |
| 01 | ஆரம்பக்கல்வி (சிங்களம்) | ஊவா | வவுனியா | - |
| | | நில்வளா | ஸ்ரீபாத | - |
| 02 | ஆரம்பக்கல்வி (தமிழ்) | மகாவலி | அட்டாளைச்சேனை | - |
| | | சாரிபுத்த | மட்டக்களப்பு | - |
| | | ஸ்ரீபாத | யாழ்ப்பாணம் | - |
| | | பஸ்துன்ரட்ட | தர்கா நகர் | - |
| | | புலதிஸிபுர | - | - |
| | | வயம்ப | - | - |
| | | றுவன்புர | - | - |
| | | ருகுணு | - | - |
| | | ஹாபிடிகம | - | - |
| | | மஹரகம | - | - |
| | | சியனே | - | - |
| 03. | விஞ்ஞானம் (சிங்களம்) | நில்வளா | வவுனியா | நில்வளா |
| 04. | விஞ்ஞானம் (தமிழ்) | சியனே | ஸ்ரீபாத | சியனே |
| 05. | விஞ்ஞானம் (ஆங்கிலம்) | ஸ்ரீபாத | அட்டாளைச்சேனை | யாழ்ப்பாணம் |
| | | | மட்டக்களப்பு | மஹரகம |
| | | | யாழ்ப்பாணம் | |
| 06 | கணிதம் (சிங்களம்) | நில்வளா | வவுனியா | நில்வளா |
| 07 | கணிதம் (தமிழ்) | பஸ்துன்ரட்ட | மட்டக்களப்பு | சியனே |
| 08 | கணிதம் (ஆங்கிலம்) | சியனே | ஸ்ரீபாத | யாழ்ப்பாணம் |
| | | ஸ்ரீபாத | அட்டாளைச்சேனை | மஹரகம |
| | | | யாழ்ப்பாணம் | |
| 09 | சமூக விஞ்ஞானம் (சிங்களம்) | ருகுணு | ஸ்ரீபாத | - |
| 10 | சமூக விஞ்ஞானம் (தமிழ்) | ஸ்ரீபாத | மட்டக்களப்பு | |
| | | | தர்கா நகர் | |
| 11 | பௌத்த சமயம் | சாரிபுத்த - (நிட்டம்புவ மற்றும் தம்பதெனிய) | | |
| 12 | இந்து சமயம் | - | வவுனியா | - |
| 13 | இஸ்லாம் | - | அட்டாளைச்சேனை | |

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| *i* | *ii* | *iii* | *iv* | *v* |
| 14 | கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம் (சிங்களம்) | வயம்ப | | |
| 15 | கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம் (தமிழ்) | | வவுனியா | - |
| 16 | முதலாம் மொழி (சிங்களம்) | வயம்ப | | |
| | | பேராதெனிய | | |
| | | ஹாப்பிட்டிகம | | |
| 17 | முதலாம் மொழி (தமிழ்) | | ஸ்ரீபாத | |
| | | | தர்காநகர் | |
| | | | மட்டக்களப்பு | |
| 18 | ஆங்கிலம் | - | - | மகாவலி |
| | | | | பஸ்துன்ரட்ட |
| | | | | யாழ்ப்பாணம் |
| | | | | பேராதெனிய |
| | | | | மஹரகம |
| 19 | சித்திரம் (சிங்களம்) | மகாவலி | ஸ்ரீபாத | - |
| 20 | சித்திரம் (தமிழ்) | வயம்ப | மட்டக்களப்பு | - |
| | | ஹாப்பிட்டிகம | யாழ்ப்பாணம் | - |
| 21 | நடனம் (கீழைத்தேயம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | | |
| | | ஹாப்பிட்டிகம | | |
| 22 | நடனம் (பரதம்) | | ஸ்ரீபாத | |
| | | | யாழ்ப்பாணம் | |
| 23 | சங்கீதம் (கீழைத்தேயம்) | மகாவலி | | |
| | | வயம்ப | | |
| | | ஹாப்பிட்டிகம | | |
| 24 | சங்கீதம் (கர்நாடகம்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 25 | மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்) | - | - | மஹரகம |
| 26 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | மஹரகம | | |
| | | வயம்ப | | |
| 27 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | | மட்டக்களப்பு | |
| 28 | சுகாதாரமும் உடற்கல்வியும் (சிங்களம்) | ஊவா | வவுனியா | ஊவா |
| 29 | சுகாதாரமும் உடற்கல்வியும் (தமிழ்) | நில்வளா | மட்டக்களப்பு | - |
| 30 | சுகாதாரமும் உடற்கல்வியும் (ஆங்கிலம்) | ஹாப்பிட்டிகம | யாழ்ப்பாணம் | |
| | | வயம்ப | | |
| | | ருகுணு | | |
| 31 | மனைப் பொருளியல் (சிங்களம்) | ருகுணு | வவுனியா | |
| 32 | மனைப் பொருளியல் (தமிழ்) | | தர்காநகர் | |

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| *i* | *ii* | *iii* | *iv* | *v* |
| 33 | விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (சிங்களம்) | புலதிஸிபுர | வவுனியா | |
| 34 | விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ்) | | | |
| 35 | தொழில்நுட்ப கற்கை – நுட்பக்கலை (சிங்களம்) | சியனே | | |
| 36 | தொழில்நுட்ப கற்கை – நுட்பக்கலை (தமிழ்) | | மட்டக்களப்பு | |
| 37 | வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பவியலும் (சிங்களம்) | சியனே | மட்டக்களப்பு | |
| 38 | வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பவியலும் (சிங்களம்) | | | |
| 39 | வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலும் (சிங்களம்) | | | |
| 40 | வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பவியலும் (தமிழ்) | | | |
| 41 | வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பவியலும் (தமிழ்) | | | |
| 42 | வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலும் (தமிழ்) | | | |
| 43 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்) | | | றுவன்புர பஸ்துன்ரட |
| | | | | மஹரகம |
| 44 | இரண்டாம் மொழி (சிங்களம்) | மகாவலி | | |
| | | வயம்ப | | |
| | | மஹரகம | | |
| | | வவுனியா | | |
| 45 | இரண்டாம் மொழி (தமிழ்) | | மகாவலி | |
| | | | வவுனியா | |
| 46 | விசேட கல்வி (சிங்களம்) | ஹாபிடிகம | அட்டாளைச்சேனை | |
| 47 | விசேட கல்வி (தமிழ்) | மஹரகம | யாழ்ப்பாணம் | |
| 48 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் (சிங்களம்) | மஹரகம | அட்டாளைச்சேனை | |
| 49 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் (தமிழ்) | | | |

**கவனத்திற் கொள்க :**

- தமிழ்மொழி மூலம் பாடநெறி நடாத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்விக் கல்லூரி ஒதுக்கப்பட்டிருப்பது பெண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே.

## 6.0 2024 ஆம் ஆண்டிற்கு ஆசிரிய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்கு முறைமை

6.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :

6.1.1 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு முறையே 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதினால் பாடசாலைத் தொகுதியில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிட எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிட எண்ணிக்கை மற்றும் கஸ்ட பிரதேசங்களில் பாட பல்வகைமையை ஏற்படுத்துவதற்கான தேவை தொடர்பாக கவனத்திற் கொண்டு பாட அடிப்படையில் ஆசிரியர் தேவையைக் கணக்கிட்டு அந்த எண்ணிக்கையை 2024 ஆம் வருடத்தில் பயிலுநர்களுக்காக ஒவ்வொரு பாட நெறிக்கும் கல்வியியற் கல்லூரியினுள் ஒரே தடவையில் வசதிகளை வழங்கக் கூடிய எண்ணிக்கையோடு பொருந்துமாறு உள்ளெடுக்கப்படும் பயிலுநர்களின்எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

- சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது ஒவ்வொரு பாடநெறிக்கும் கல்வியியற் கல்லூரிகளில் நிலவும் வசதிகள் வழங்கப்படக்கூடிய எண்ணிக்கையாகும்.

6.1.1.1 அதன்படி 2021 ஆம் ஆண்டில் அல்லது 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு பாடநெறிகளுக்கு ஆட்சேர்த்தல் கீழ் வருமாறு மேற்கொள்ளப்படும்.

(i) பாடநெறி மொழிமூலத்தை தேர்ந்தெடுக்கும் போது வர்த்தமானி அறிவிப்பின் 5.0 இல் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு பாடநெறியும் நடத்தப்படும் மொழிமூலம் மற்றும் அதற்குத் தேவையான தகுதிகள் பற்றிய தெளிவான புரிதலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) ஆட்சேர்ப்பு செய்ய தீர்மானிக்கும் போது மொத்த வெற்றிடங்களில் 50% தேசிய அடிப்படையிலும் மீதமுள்ள 50% மாவட்ட அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். தேசிய மற்றும் மாவட்ட அடிப்படையில் வெற்றிடங்களை ஒதுக்குவதில் தேசிய அடிப்படைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் பாடநெறிக்கு (சுகாதாரமும் உடற்கல்வியும் பாடநெறி தவிர) உரிய மொழி மூலத்தில் உரிய மாவட்டத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அறியத்தரப்பட்டுள்ள எண்ணிக்கை, மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட Z புள்ளிகளின் தொடரொழுங்கில் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு ஏனைய தகைமைகளையும் சரியான விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு, 4.0 இல் "கவனத்திற் கொள்க" என்ற பகுதியில் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர். சுகாதாரமும் உடற்கல்வியும் பாடநெறிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், உரிய மொழி மூலத்திலும் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை, விண்ணப்பதாரிகளின் விளையாட்டு புள்ளிகளின் தொடரொழுங்குக்கு அமைய 4.0 இல் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

(iv) மாவட்ட அடிப்படையிலான வெற்றிடங்களை நிரப்பிய பிறகு தேசிய மட்டத்திலான வெற்றிடங்களுக்கான தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். பின்னர், மீதமுள்ள விண்ணப்பதாரர்களில், பத்தி 4.0 இல் கவனத்திற் கொள்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு ஏற்ப, சம்பந்தப்பட்ட பாடநெறியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கேற்ப கீழ், நாட்டில் அதிக Z புள்ளிவரிசை ஒழுங்குக்கேற்ப மற்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தகுதிகளுடன் சேர்த்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். சுகாதாரமும் உடற்கல்வியும் பாடநெறிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவது மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு எஞ்சிய விண்ணப்பதாரிகளில் நாட்டிலே விளையாட்டு புள்ளி தொடரொழுங்கு வரிசை 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மற்றும் தொடர்புடைய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டவாறாகும்.

(v) வெற்றிடங்களை நிரப்பிய பிறகு மாவட்ட மட்டத்தில் வெற்றிடம் ஏற்பட்டால், தேசிய மட்டத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து அந்த மாவட்டத்தின் தகுதி தொடரொழுங்கு மற்றும் விருப்பத்துக்கு அமைய மாவட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படும். அதன் போது தேசிய மட்டத்தில் வெற்றிடம் ஏற்பட்டால், அந்த வெற்றிடம் தேசிய மட்டத்தில் நிரப்பப்படும்.

(vi) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஒவ்வொரு பாடநெறிக்குமாக உரிய மொழிமூலத்தில் பெருந்தோட்ட மாவட்டத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை, அதற்குச் செல்வாக்குச் செலுத்தும் விஷேட நிபந்தனைகளுக்கு

உட்பட்டு விண்ணப்பதாரிகள் பெற்றுள்ள Z புள்ளியின் தொடரொழுங்கு மற்றும் ஏனைய தகைமைகள் சரியான விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு 4.0 இல் "கவனத்திற் கொள்க" என்ற பகுதியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

6.1.2 Z புள்ளி திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பாடநெறிகளில் உரிய மாவட்டத்தில் அல்லது தேசிய அடிப்படையில் சமமான Z புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது /விளையாட்டுத் திறமை அடிப்படையில் சமமான புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது, முதற் தடவையாக க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் 3.0 இல் 3.5 இன் கீழ் குறிப்பிடப்பட்ட வகையில் மையப் (பிரதான) பாடங்கள் ஆறிற்கு (06) பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் கவனத்திற் கொள்ளப்படுவதற்காகப் பயன்படுத்தப்படும்.

அதற்கிணங்க க.பொ.த. (சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறுகளில் விசேட சித்திக்காக 04 புள்ளிகளும் அதிதிறமைச் சித்திக்காக 03 புள்ளிகளும் திறமைச் சித்திக்காக 02 புள்ளிகளும் சாதாரண சித்திக்காக 01 புள்ளியும் என்ற வகையில் புள்ளிகள் வழங்கப்பட்டு அந்த மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு மேற்கொள்ளப்படும்.

6.1.3 உடற்கல்வி, நடனம் (கீழைத்தேயம்), நடனம் (பரதம்), சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்), நாடகமும் அரங்கியலும் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பாடத்திற்குரிய விஷேட தேர்ச்சியை உறுதி செய்தல் வேண்டும்.

6.1.4 மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படும் போது ஏதேனும் ஒரு பாடநெறிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்த தரவுத் தளத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டம் உரித்தாகும் மாகாணத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் உரிய திறமைகளின் தொடரொழுங்கிலும்அவையும் போதுமான எண்ணிக்கையில் இல்லாதவிடத்து தேசிய மட்ட திறமைகள் தொடரொழுங்கும் கவனத்திற் கொள்ளப்பட்டு அவ் வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும்.

6.2 நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தல்

6.2.1 விண்ணப்பதாரிகளின் நிரந்தர வதிவிட மாவட்டம் / மாகாணம் கீழ்க் குறிப்பிடப்பட்ட முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

6.2.1.1 மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் போது விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் மாவட்டம் என்பது அவர் முதன் முறையாக க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் அதற்கு முன்னைய இரண்டு வருடங்கள் நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

6.2.1.2 இங்கு விண்ணப்பதாரி முதன்முறை அல்லது இரண்டாவது தடவை க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை உரித்தாகும் மாவட்டம், விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடத்திலிருந்து வெளியேயுள்ள மாவட்டம் / பிரத்தியேக வசதி கருதி உரிய காலத்தினுள் தற்காலிகமாக வசித்திருந்த மாவட்டம் /தற்போது வதிடத்தினை வேறு மாவட்டத்திற்கு மாற்றியிருப்பின் அம்மாவட்டம் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டமாகக் கருதப்பட மாட்டாது என்பது வலியுறுத்தப்படுகிறது.

6.2.1.3 மாகாண மட்ட தகைமை அடிப்படையாகக் கருதும் போது விண்ணப்பதாரி முதன்முறையாக க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பதாரியின் மாகாணமாக கொள்ளப்படும்.

6.2.2 அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது நிரந்தர வதிவிடத்தினை கீழே குறிப்பிடப்பட்ட முறைக்கமைய உறுதிப்படுத்த வேண்டும்.

**கவனத்திற் கொள்க :**

- வாக்காளர் பெயர் பட்டியலின் தரவு நேர்முகப்பரீட்சையின் போது தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் இணையத்தளத்தின் ஊடாக பரிசோதிக்கப்படுவதால் எந்த ஒரு விண்ணப்பதாரியும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் இதற்குரிய எந்தவொரு ஆவணத்தையும் முன்வைக்க தேவையில்லை எனவும் நேர்முகப்பரீட்சையின் போது கீழ்க்காணும் வகையில் உரியவாறு உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

i. சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைக்கு அமைவாக விண்ணப்பதாரியினால் தமது நிரந்தர வதிவிடம் வாக்காளர் பெயர்ப் பட்டியல் தரவு ஊடாக உறுதி செய்ய வேண்டும்.

ii. விண்ணப்பதாரியின் வயது பூரணமாகாத காரணத்தால் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் உரிய வருடங்களுக்காக பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தரவு ஊடாக வதிவிடம் குறித்த தகவல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

iii. யாதுமொரு காரணத்தினால் பெற்றோர்கள் அல்லாது வேறு பாதுகாவலரின் கீழ் உரிய காலப் பகுதியில் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரிகள் அந்தப் பாதுகாப்பிலிருந்த காலப்பகுதியோடு கிராம அலுவலகரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழில் (DS-04) - "வேறு காரணங்கள்" என்னும் பகுதியின் கீழ் குறிப்பிட்டு, நேர்முகப்பரீட்சை சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் போது ஒரு விண்ணப்பதாரியின் வாக்கு இல்லாத வருடங்களுக்காக பாதுகாவலரின் வதிவிடத்தை வாக்காளர் பெயர்ப்பட்டியல் தரவு ஊடாக உறுதி செய்ய வேண்டும்.

iv. ஏதாவது காரணத்தால் உரிய மூன்று (03) வருடங்கள் அல்லது சில வருடங்களுக்கு உரிய வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்படாதிருந்தால்/ பெயர்ப்பட்டியல் தரவு ஊடாக வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் வாக்காளர் பதிவு செய்ய முடியாமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தை கிராம அலுவலகரினால் வழங்கப்படும் வதிவிட மற்றும் நடத்தை சம்பந்தமான சான்றிதழில் (DS-04) "வேறு காரணங்கள்" என்பதன் கீழ் அக்காலப்பகுதிக்கான நிரந்தர வதிவிட பிரதேசத்தின் கிராம அலுவலகர் கையொப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

v. வாக்கு பதிவு செய்யப்படாத காரணத்தால் ஒரு வருடத்திற்கோ அல்லது இரு வருடங்களுக்கோ மட்டும் உரிய வாக்காளர் இடாப்பின் தரவுப் பிரதிகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய வருடங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வேறு ஆவணங்களினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (உதாரணம் : கிராம அலுவலகர் சான்றிதழ், ஆட்பதிவு திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டையின் முகவரி)

vi. யாதும் காரணத்தால் மூன்று வருடங்களுக்காக (03) அல்லாமல் ஒரு வருடத்துக்கு மாத்திரம் விண்ணப்பதாரர் பதிவு செய்திருந்தால், எஞ்சிய வருடங்களுக்கு பெற்றோரின்/ பாதுகாவலரின் வாக்கு எந்த மாவட்டத்துக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் விண்ணப்பதாரரின் வாக்காளர் பதிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6.3 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல் :

6.3.1 சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள இன விண்ணப்பதாரர்கள் மூலமும் வெற்றிடம் நிரப்பப்படும் (நேர்முகப்பரீட்சையின் போது இந்திய வம்சாவளி தமிழர்கள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இயலுமாக இருத்தல் வேண்டுமென்பதோடு, தமது பிறப்புச் சான்றிதழில் தந்தையின் அல்லது தாயின் இனம் இந்தியத் தமிழ் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

6.3.2 பெருந்தோட்ட மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களின் போதுமான தன்மைக்கு அமைய சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அம்மாவட்டங்களுக்கு பிரிக்கப்பட்டுள்ளது.

6.3.3 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி, குருநாகல் மற்றும் கொழும்பு ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத்துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும்.

6.3.4 இதுவரை பெருந்தோட்டங்களில் சேவை புரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கும் தற்போது தோட்டங்களில் வசிக்கும், பெருந்தோட்ட துறையில் 10 வருடங்கள் சேவையாற்றிய பின்,

2012 - 2021 (2021 - க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்காக)

2013- 2022 (2022 - க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்காக)

எனும் காலப்பகுதியில் ஓய்வு பெற்ற, சுகயீனம் காரணமாக சேவையிலிருந்து விலகிய அல்லது இறந்தவர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.5 மேலே 6.3.4 இல் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் போதியளவில் காணப்படாவிடில் பெருந்தோட்டப் பகுதிகளில் தற்போது சேவை புரியாவிடினும், கீழே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பெருந்தோட்டப் பிள்ளைகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.5.1 2021 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு உரியதாக, 2011 வருடம் அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் தோட்ட சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு (04), மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக ஒழுங்கு முறையில் கருத்திற் கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப்படுவது 2020, 2019, 2018 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில் ஆகும்.)

6.3.5.2 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு உரியதாக, 2012 வருடம் அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் தோட்ட சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு (04), மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக ஒழுங்கு முறையில் கருத்திற் கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப்படுவது 2021, 2020, 2019 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில் ஆகும்.)

6.3.6 ஏதாவது தமிழ்மொழி மூல பாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிகளில் தகைமை பெறுகின்ற போதியளவான எண்ணிக்கையினர் இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வசிக்கின்ற தோட்டப்பகுதிகளில் வேலை செய்யாத இந்திய வம்சாவளி விண்ணப்பதாரிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

6.3.7 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் வசிக்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.8

6.3.8.1 சிங்கள மொழிமூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்ட மாவட்டத்தில் வசிக்கும் பெருந்தோட்டப் பகுதியில் சேவைபுரியும் வதிவாளர்களின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுவது ஸ்ரீபாத /ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து அவர்களின் Z புள்ளி மற்றும் வேறு பொருத்தமான தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6.3.8.2 தமிழ் மொழி மூல பாடநெறிகளுக்காக 6.3.4 - 6.3.7 இன் படி தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையை கொண்டிராவிடில், அந்த பாடநெறிகளுக்காக தமிழ் மொழிமூல நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் ஏனைய கல்வியியற் கல்லூரி ஊடாக தரவு அடிப்படை முறைமையிலுள்ள தகைமை பெற்றோரை தொடரொழுங்கின் அடிப்படையில் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

6.3.9 நேர்முகப்பரீட்சையின் போது அரச மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் அதனை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் தமக்குப் பொருத்தமான ஆவணங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

- தற்போது பெருந்தோட்டங்களில் சேவை புரிபவர்களாயின் தோட்டங்களில் சேவை செய்கின்றார்கள் எனவும் (அந்த காலப்பகுதியை குறிப்பிட்டு) மற்றும் நிரந்தரமாக தோட்டங்களில் வதிவது தொடர்பாக தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம்,
- பத்து ஆண்டுகள் (10) சேவையின் பின்
  2012 - 2021 (2021 - க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்காக)
  2013 - 2022 (2022 - க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்காக)
  காலப் பகுதியில், சுகயீனம் காரணமாக பெருந்தோட்ட சேவையில் இருந்து விலகிக் கொண்ட /ஓய்வு பெற்றுக் கொண்ட அல்லது இறந்து போன தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வசிப்பது தொடர்பாக உரிய வதிவிடப் பதிவு மற்றும் சேவையில் இருந்து விலகிய / ஓய்வு பெற்ற வருடம் மற்றும் தினம் தெளிவாக உறுதி செய்யப்பட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் கிராம அலுவலரின் சான்றிதழ்,

- பெருந்தோட்ட சேவையில் இருந்து
  2012 அல்லது அதன் பின்னரான வருடங்களில் (2021 - க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்காக) மற்றும் 2013 அல்லது அதற்கு பின்னரான வருடங்களில் (2022 - க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்காக) ஓய்வு பெற்றுள்ள / பெருந்தோட்ட சேவையிலிருந்து விலகிய சேவையாளர்கள் தாம் கடந்த ஐந்து (05) வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் தொடர்ச்சியாக சேவையாற்றியமை குறித்து உறுதிப்படுத்தி ஓய்வு பெற்ற / தோட்ட சேவையிலிருந்து விலகிய வருடம், திகதி என்பன தெளிவாக குறிப்பிட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம்.

- ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு பணம் அறவிடுவதாக / அறவிடப்பட்டமை தொடர்பாக பதிவு இலக்கத்துடன் உறுதி செய்யக்கூடிய கடிதம் /கடிதங்கள் மற்றும் பெருந்தோட்டப் பகுதியில் வசிக்கின்றமை உறுதிப்படுத்தும் கிராம சேவகரினால் வழங்கப்படும் கிராம சேவகர் சான்றிதழ்.

6.3.10 விண்ணப்பதாரி கற்கையின் பின்னர் பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகளில் தொடர்ச்சியாக பத்து (10) வருடங்கள் சேவையாற்றுதற்கு சம்மதிப்பதாக சத்திய பிரமாணத்தை நேர்முகப்பரீட்சையின் போது கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.11 சிங்கள மொழி மூலம் கல்வி கற்ற இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற் கொள்ளப்படும். அத்துடன் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் எனின் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

6.3.12 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் பெருந்தோட்டப் பகுதிகளில் சேவை புரிபவர்களின் பிள்ளைகளுக்கு தகைமைகளின் அடிப்படையில் தமக்கு உரிய மொழியில் ஏனைய கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிக்காகவும் விண்ணப்பிக்க முடியும்.

7.0 **தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள்**

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதி செய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். குறித்த தினத்தில் எந்தவித அறிவித்தலும் இன்றி நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காத அந்தந்த மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளுக்குப் பதிலாக உரிய மாவட்டத்தின் தகைமை தொடரொழுங்குக்கு அமைய வேறொரு விண்ணப்பதாரி அழைக்கப்படுவதோடு சமுகமளிக்காத விண்ணப்பதாரி தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

7.2 அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிப்பது கட்டாயமாவதுடன் அத்தினத்தில் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் தொடர்பாக தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

7.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஏற்புடைய மட்டத்தை அடைந்து ஆசிரிய தொழிலுக்குள் நுழைய விண்ணப்பதாரிகளிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உள தகவுதிறன், கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகள் அடிப்படையில் முதலாவது நேர்முகப்பரீட்சையின் போது உரிய நேர்முகப்பரீட்சைச் சபையினால் பரிசீலிக்கப்படும். அதன் போது பாடநெறியை தொடருவதற்கு மற்றும் ஆசிரிய தொழிலுக்குள் நுழைவதற்கு விண்ணப்பதாரியின் உடல், உள தகவுதிறன் போதுமானது என்பது தொடர்பாக அவரின் பெயர் விதப்புரையில் முன்வைக்கப்படும்.

7.4 மேலே 7.3 வகுதியின் படி தகைமைகளுடன் அத்தகைய இணைத்துக்கொள்ளும் நியதிகளின் கீழ் தகைமைகள் கொண்டுள்ள தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பதிவுத் தபால் மூலம் அது குறித்து அறிவிக்கப்படும். உரிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒருமுறை இரண்டாவது தடவை தகைமைகள் பரீட்சிக்கும் பொருட்டு நேர்முகப்பரீட்சை சபையினால் முன்வைக்கப்பட்ட தரவுகளின் பிழையற்ற தன்மை உறுதிசெய்து கொள்ளப்படும். அதற்கிணங்க தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் உரிய தேசிய கல்வியியற் கல்லூரியில் உரிய பாடநெறிக்காக பதிவு செய்து கொள்ளப்படுவர். தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்வதற்கு உரிய தினத்திலிருந்து பத்து (10) வேலை நாட்களுக்குள் பதிவு மேற்கொள்ளப்படாவிடின் சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் இழக்க வேண்டியேற்படும். அதனால் ஏற்படும் வெற்றிடம் சேர்த்துக்கொள்ளப்படும் நியதியின் கீழ் உரிய தரவுத் தொகுதியில் குறிப்பிடப்பட்ட

விண்ணப்பதாரிகளுக்குரிய திறமைத் தொடரொழுங்குக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

7.4.1 எனவே உரிய தினத்திற்கு பதிவு செய்யாத விண்ணப்பதாரர்களால் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் தொடர்பாக எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- மேலே இலக்கம் 7.3 அல்லது 7.4 இன் கீழ் நேர்முகப்பரீட்சைச் சபையினால் விதப்புரை செய்ய முடியாத பட்சத்தில் யாதும் விசேட பிரச்சினை காணப்படும் பட்சத்தில் மாத்திரம் அந்நிலைமை தொடர்பாக நேர்முகப்பரீட்சைச் சபை திருப்தியடையாத பட்சத்தில் விடயம் விசேட நேர்முகப்பரீட்சைச் சபைக்கு உட்படுத்தப்படும். அந்த சபை அறிக்கையை கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு /கல்விச் செயலாளருக்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்.

7.5 முதலாவது மற்றும் இரண்டாவது நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய பின்னர் கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்ய தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் தமது உடல் உள தேகாரோக்கியத்தினை உறுதிசெய்வதற்காக வைத்திய பரிசோதனைக்கு உட்படவேண்டும்.

7.6 ஏதேனும் விண்ணப்பதாரிக்கு தமது விருப்பத்தின் தொடரொழுங்கிற்கு அமைய மூன்று பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். எனினும், தேர்ச்சிகளின் அடிப்படையில் தகைமை பெறும் பாடநெறிக்காக மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவதோடு, பாடநெறி ஒன்றுக்கு அதிகமாக தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமை பெறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகளின் விருப்பத் தொடரொழுங்கின் முன்னுரிமை அடிப்படையில் ஒரு பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படுவர்.

7.7 தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஏதேனும் பாடநெறிக்காக பதிவு செய்யப்பட்ட பின்னர் எந்தவொரு காரணத்திற்காகவும் வேறொரு பாடநெறிக்கு பின்னர் தேர்ந்தெடுக்கப்படின் அதற்கிணங்க முதலாவது பாடநெறியை அல்லது தேசியக் கல்வியியற் கல்லூரியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. அதேபோல் ஒரு தேசியக் கல்வியியற் கல்லூரியில் ஏதாவதொரு பாடநெறிக்கு பதிவுசெய்த பின்னர் வேறு பிரத்தியேகக் காரணங்களினால் தேசிய கல்வியியற் கல்லூரி, பாடநெறி, பாடநெறி மொழிமூலம் மாற்றப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

7.8 எந்தவொரு பாடநெறிக்கும் போதியளவு பயிலுனர் எண்ணிக்கை ஏதேனும் கல்வியியற் கல்லூரிகளில் இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய பாடநெறி நடாத்தப்படுகின்ற அண்மையில் உள்ள வேறு கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப்படுவர்.

7.9 போதியளவு ஆசிரியர் தேவை இல்லாத பாடநெறி இரத்துச் செய்யப்படுதல், சேர்த்துக்கொள்ளும் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் மற்றும் ஒவ்வொரு பாடநெறியையும் நிறுவனங்களில் நிலைப்படுத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை /கல்விச் செயலாளர் வசமானதாகும்.

8.0 **பாடநெறிக்காக விண்ணப்பிக்க அல்லது சேர்வதற்கு தகைமையற்றவர்கள்.**

8.1 ஏற்கனவே அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலைகளில், அரசில் பதிவு செய்த பிரிவெனாக்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு கல்விக்கூடங்களில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்கள்.

8.2 அரச பாடசாலைகளில் நியமனம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளோர்.

8.3 தற்போது வரைக்கும் தேசிய கல்வியியற் கல்லூரியில் பாடநெறியைத் தொடராது கைவிட்டவர்கள் அல்லது தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் அல்லது தொடர்ந்து பூர்த்தி செய்தவர்கள்.

8.4 அரச பல்கலைக்கழகம் / அரச பல்கலைக்கழக நிறுவகம் க.பொ.த. (உயர்தர) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் பட்டப் பாடநெறி தொடர்வதற்காக 'அரச இலவசக் கல்வி வாய்ப்பு' என்பதன் கீழ் மாணவர்களாக பதிவு செய்திருக்கின்ற/ பாடநெறியைத் தொடர்கின்ற/ பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்தி செய்துள்ளோர் (தற்போது மேற்கூறிய நிறுவனங்களில் இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்கள் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் பதிவு இரத்து செய்யப்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிப்பதற்கு / அனுமதி பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்பு /நேர்முகப்பரீட்சை நடைபெற்ற பின்பு மேற்படி நிறுவனங்களில் உரிய பாடநெறிக்கு பதிவு செய்து கொண்டு அவற்றை இரத்துச் செய்திருப்பின் அனுமதிக்கு தகுதியற்றவராவர்.)

**கவனத்திற் கொள்க :**
தொடரறா முறையில் (Online System) பல்கலைக்கழக அனுமதிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருப்பது, தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிப்பதில் இருந்து உங்களைத் தகுதியற்றதாக்கும்.

8.5 ஒழுக்காற்று செயற்பாடுகளின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களுக்காக தேசியக் கல்வியியற் கல்லூரியின் மாணவ அந்தஸ்து ரத்து செய்யப்பட்டவர்கள்.

8.6 திருமணப் பதிவு மேற்கொண்ட/விவாகரத்து செய்த விண்ணப்பதாரிகள்.

9.0 **பாடநெறிக்கான நிபந்தனைகள் :**

9.1 பாடநெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும். இது தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருடங்கள் வதிவிடக் கற்கை பெற்றதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்து ஒரு வருடகாலம் கட்டுறுப்பயில்வு மேற்கொள்ளல் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில்நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுநர்களின் வரவு 90% ஐ விட குறையாதிருக்க வேண்டும்.

9.2 சகல ஆசிரிய மாணவர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் உள்ளக தொடர் மதிப்பீட்டிலும், உள்ளகப் பரீட்சைகளிலும் மற்றும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழி பாடநெறியைத் தொடருகின்றவர்கள் தவிர்ந்த ஏனைய சகல பாடநெறிகளைத் தொடர்கின்றவர்கள் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் ஆங்கில மொழியில் சித்தியடைய வேண்டும்.

9.3 சகல ஆசிரிய மாணவர்களும் வதிவிடக் கற்கை பெறும் இரண்டு வருடங்களுக்கும் ஒரு வருடத்திற்கு பத்து (10) மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா 5,000.00 பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். கட்டுறுப்பயில்வு காலத்தில் பத்து (10) மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா 5,000.00 வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான செலவுகள் பயிலுநர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9.4 தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் ரூபா ஐந்து லட்சம் (ரூபா 500,000) முறி மற்றும் உடன்படிக்கையொன்றில் ஒப்பமிட வேண்டும். விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் 60 தினங்களுக்குள் பாடநெறியை இடைநிறுத்துவாராயின் ஆசிரிய மாணவர்களுக்காக செலவிடப்பட்ட தொகையை அரசுக்கு மீளச் செலுத்திய பின்பு விலகிக் கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் 60 தினங்களின் பின்னர் பயிற்சியை இடைநிறுத்துவாராயின் இப்பிணை முறியின் முழுத்தொகையையும் (ருபா 500,000.00) அரசுக்கு செலுத்த வேண்டும். மேலும் யாதேனும் விண்ணப்பதாரி எந்தவொரு முறையான அறிவித்தலுமின்றி ஒரு மாதத்திற்கு குறையாத காலப்பகுதியில் பாடநெறியின் கல்வி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றாதிருப்பின் அவர் பாடநெறியைக் கைவிட்டுச் சென்றதாக கருதப்பட்டு இப்பிணை முறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் (ருபா 500,000.00) அரசுக்கு செலுத்திய பின்னர் பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள முடியும்.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் அரச பாடசாலையொன்றிற்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொள்ளாவிடின் இப்பிணை முறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் (ரூபா 500,000.00) அரசுக்குச் செலுத்த வேண்டும். மேலும் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் அரச பாடசாலையொன்றிற்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஐந்து (05) வருடங்கள் அரச சேவையில் இருக்காதவர், சேவையாற்ற வேண்டிய ஐந்து வருடத்தில் எஞ்சிய காலங்களுக்கு (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) உரிய தொகையை செலுத்த வேண்டும்.

அத்தொகை கணக்கிடப்படுவது

$\frac{\text{ரூபா } 500,000.00}{60 \text{ மாதங்கள்}} \times$ பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள் என அமையும்.

9.4.1 விசேட மருத்துவ காரணங்களுக்காக பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பாடநெறியைவிட்டு விலக வேண்டியேற்படுமாயின் கீழ்க்காணும் ஆவணங்கள் சகிதம் நோயின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும்.

- பிணியுற்ற நிலைமை காரணமாக சிகிச்சை பெறுவதற்கான ஏற்புடைய வைத்திய அறிக்கை.
- மேலும் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள உகந்த ஆரோக்கியமின்மை தொடர்பாக அரச மருத்துவரினால் உறுதிசெய்த கடிதம்.

உரிய ஆவணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, கல்வியியற் கல்லூரி முகாமைத்துவ குழுவினால் நோக்கப்பட்டு பரிந்துரைப்புகள் முன்வைக்கப்பட்ட பின் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினதும் சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட அரச வைத்தியசாலையின் வைத்தியர் அல்லது வைத்திய சபையினதும் சிபார்சுகளைப் பெற்று அதற்காக கல்வியியற் கல்லூரி நிறுவாக சபை /கல்விச் செயலாளர் அனுமதி பெறப்பட்டு எவ்வித அறவிடலும் இன்றி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

9.4.2 சட்டப்படி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ளாமல் பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் அல்லது நிரந்தர ஆசிரிய நியமனம் பெறும் வரையான காலப்பகுதியில் வெளிநாடு செல்வதற்காக எந்தவொரு பயிலுநருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.5 பாடநெறியைத் தொடரும் காலப் பகுதியில் ஒழுக்காற்றுக் காரணமாகவோ அல்லது சேர்த்துக்கொள்வதன் பொருட்டு போலித் தகவல்கள் முன்வைத்ததன் அடிப்படையில் 8.0 பகுதியில் குறிப்பிடப்பட்ட வகையில் விண்ணப்பித்தமை அல்லது அனுமதிக்கு தகைமையற்ற போன்ற பகுதிக்கு உரிய வகையில் போலித் தகவல்கள் வழங்கப்பட்ட அடிப்படையில் பாடநெறியை விட்டு விலக்கும் போது பிணை முறியின் முழுப்பெறுமதி (ரூபா 500,000.00) அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9.6 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதிக்குள் ஆசிரிய மாணவர்களுக்கு பகுதி 8.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடநெறியைத் தொடர்வதற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் ஆசிரிய மாணவர் ஒப்பமிடுகின்ற பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதி (ரூபா. 500,000.00) மீள அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர்.

9.7 வர்த்தமானி அறிவித்தலில் 8.4.பகுதியில் காட்டப்பட்ட தகைமை மற்றும் நிபந்தனைகளின் கீழ் வேறு ஏதேனும் அரச உயர்கல்வி நிறுவனங்களில் தொழில்சார் பயிற்சிப் பாடநெறி/டிப்ளோமா அல்லது உயர் டிப்ளோமா பாடநெறிக்காக பதிவு செய்த/கற்றலை மேற்கொள்கின்ற விண்ணப்பதாரிகள், கல்வியியல் கல்லூரி அனுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அதற்காகப் பதிவு செய்யப்பட்ட தினத்தில் மேற்கூறிய நிறுவனத்தில் தம்மால் பதிவு செய்துகொண்டுள்ளதாக/ கற்கின்ற பாடநெறிகளிலிருந்து முறைப்படி விலகிக் கொண்டமையை உறுதிசெய்த ஆவணங்கள் கல்வியியல் கல்லூரிக்கு ஒப்படைக்கப்படுவது கட்டாயமானது என்பதோடு, அவ்வாறு செய்யாத விண்ணப்பதாரிகள் கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்யப்படமாட்டார்கள்.

9.8 பாடநெறியைத் தொடரும்காலப் பகுதியில் பயிலுநர் திருமணப் பதிவு செய்தல் அல்லது விண்ணப்பிக்கும்போது / கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்வதற்கு முன்னர் திருமணப் பதிவு செய்தவர் /விவாகரத்தானவர் என உறுதி செய்யப்படின் மாணவ அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். திருமணமானமை தெரிய வந்ததன் பின்னர் எந்தவொரு காரணத்தினாலும் பாடநெறிக் காலப்பகுதிக்குள் விவாகரத்து செய்திருந்தாலும் எக்காரணம் கொண்டும் மீண்டும் மாணவர் அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது.

9.9 மதகுருமார்களுக்கான / துறவிகளுக்கான விசேட ஒதுக்கீட்டின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் பதிவு செய்ததன் பின்னர் பாடநெறிக் காலத்திலே சாதாரண வாழ்க்கைக்கு தம்மை மாற்றிக்கொண்டாராயின் பிணை முறிக்கு அமைய முழுப்பெறுமதி (ரூபா 500,000.00) அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து விலக்கப்படுவார்கள். பயிற்சியை முடித்துக்கொண்டதன் பின்னர் சகல சமயங்களுக்குமுரிய மதகுருமார் / துறவிகள் தமது துறவி வாழ்க்கையைக் கைவிடுவதில்லையென்றும் குறைந்தது 05 வருடங்களுக்கு கல்வி அமைச்சுக்கு சேவையாற்றுவதாகவும் கல்வி அமைச்சுடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்துக்கு உடன்படவேண்டும். யாதும் காரணத்தால் உரிய ஐந்து (05) வருட பூர்த்திக்கு முன் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதாயின் எஞ்சிய காலத்துக்காக (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) பிணைமுறி உடன்படிக்கைக்கு உரிய தொகை கணக்கிடப்பட்டு, அந்த முழுத்தொகை அரசுக்கு செலுத்தப்படவேண்டும்.

அத்தொகை கணக்கிடப்படுவது,

$$\frac{\text{ரூபா } 500,000.00}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$ என அமையும்.

**கவனத்திற் கொள்க :**

- இதன்போது தகுதிகாண் காலத்துக்குள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பின் உரிய தொகை அறவிடப்பட்டு சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

9.10 பாடநெறியைத் தொடரும் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பழக்கவழக்கங்கள், வரவு, ஆர்வம் உட்பட பிறிதும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத (இணைப்பாடவிதான செயற்பாடுகள் உட்பட) பயிலுநர்கள் பாடநெறியைத் தொடர்வதிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் பாடநெறியின் முதலாவது ஆண்டில்

மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது திருப்திகரமான மட்டத்தை அடையத் தவறும் போது பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் /கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

9.11 பாடநெறியைத் தொடரும் கால எல்லைக்குள் பயிலுநர்களின் உடல், உள பொருத்தம் தொடர்பாக பீடாதிபதி அல்லது கட்டுறுப்பயில்வு கால எல்லைக்குள் அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் விசேட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதன் அறிக்கை கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு /கல்விச் செயலாளருக்குச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

9.12 பாடநெறியைத் தொடரும் காலத்தின் போது கல்வியியற் கல்லூரியின் ஒழுக்க விதிமுறைகளுக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது உறுதிசெய்யப்படுமாயின் அது தொடர்பாக கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபையின் விதப்புரைக்கு அமைய குறித்த காலப்பகுதியில் வகுப்புத்தடை செய்தல் /பாடநெறிக்காலத்தை நீடித்தல் / பாடநெறியிலிருந்து நீக்கப்படுதல் /பிறிதும் பொருத்தமான தண்டனைக்குட்படுத்தலுக்கான அதிகாரம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் /கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.13 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பயிலுநர் யாதுமொரு பிற பாடநெறியை பின்பற்றுவதற்காக வார நாட்கள் /வார இறுதி நாட்களில் நிறுவனத்தை விட்டு வெளியே செல்ல எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.14 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சகிதம் முதல் ஐந்து வருட காலம் ஆசிரிய சேவையில் இருக்கும் போது யாதும் காரணத்துக்காக சேவையிலிருந்து விலகுவதாயின் அல்லது வெளிநாடு செல்வதாயின் உரிய பிணைமுறி உடன்படிக்கைக்கு அமைய முழுத்தொகையான ஐந்து இலட்சத்தில் (ரூபா 500,000.00) எஞ்சியிருக்கும் காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய (மாதங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்டு) தொகை அரசுக்கு செலுத்தப்படவேண்டும்.

அந்ததொகை கணக்கிடப்படுவது,

$$\frac{\text{ரூபா } 500,000.00}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$ என அமையும்.

**கவனத்திற் கொள்க :**

- முதல் ஐந்து வருட காலப்பகுதிக்குள் 9.14 பகுதியில் குறிப்பிட்டவாறு சேவையிலிருந்து விலகினால் மீண்டும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரியாக ஆசிரிய தொழிலில் நுழைவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது.
- அரச பாடசாலையில் முதல் நியமனத் திகதி தொடக்கம் 05 வருட காலப்பகுதிக்கு முனைப்பான சேவைக் காலத்தினை பூர்த்திசெய்யாத ஆசிரியர் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கொண்ட ஆசிரியருக்குரிய விரிவான டிப்ளோமா சான்றிதழைக் கோருவதற்கு தகைமையற்றவர்.
- ஆசிரிய சேவையின் முதல் ஐந்து (05) வருடங்களைப் பூர்த்திசெய்யாத தகுதிகாண் காலத்துக்குட்பட்ட கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியருக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றறிக்கையின்படி மற்றும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபனக்கோவை ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளும் உரிய காலப்பகுதியினுள் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய ஒழுங்குவிதிகளும் செல்லுபடியாகும் என்ற வகையில் கல்விச் செயற்பாடுகளுக்காக மாத்திரம் சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு செல்லலாம்.
- ஆசிரிய சேவையின் முதல் ஐந்து (05) வருடங்களைப் பூர்த்திசெய்யாது எனினும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியருக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றறிக்கையின்படி மற்றும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபனக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தில் 16 வது பகுதியில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் உரிய காலப்பகுதியினுள் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய ஒழுங்குவிதிகளும் செல்லுபடியாகும் என்ற வகையில் அதற்கமைய கல்விச் செயற்பாடுகளுக்காக / வேலை நடவடிக்கைகளுக்காக சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு செல்லலாம்.

9.15 பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் ஆசிரிய மாணவர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்க வேண்டிய பாட இணைச் செயற்பாடுகள் உட்பட) பாடநெறி தொடரும் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன், இம் மதிப்பீடு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

9.16 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பெற்றுக்கொண்ட ஆசிரிய மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். இவர்கள் மாவட்ட அடிப்படையில் /மாகாண அடிப்படையில் /தேசிய மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் இடநிலைப்படுத்தும் போது உரிய மாவட்டத்தில் / மாகாணத்தில் வெற்றிடம் இல்லாவிடின் நாட்டின் ஏதாவது ஒரு இடத்தில் சேவை புரிவதற்கு இணங்க வேண்டும். (இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடநெறிக்காக பாடநெறி இலக்கம் 44 மற்றும் 45 இன் கீழ் காட்டப்பட்டுள்ள நிபந்தனை பொருத்தமாகும்) சேவைக்கமர்த்தப்படுதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் அனுமதியுடன் கல்வியியற் கல்லூரி நிறுவாக சபையின் /கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.16.1 பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படுவதற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உடன்படுவாராயின் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும்.

9.16.2 மேற்கூறப்பட்ட நிபந்தனையின் கீழ் பாடநெறியைத் தொடரும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாகத் தாம் பயிலும் பாடநெறிக்குரிய பாடத்தைக் கற்பிக்க வேண்டும். மேலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த பின் மாவட்ட அடிப்படையில் /மாகாண அடிப்படையில் /தேசிய அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் முதல் நியமனம் பெறும், தமது நிரந்தர வதிவிட மாவட்டத்தில் /நிரந்தர வதிவிட மாகாணத்தில் அல்லது தேசிய மட்ட அடிப்படையில் குறிப்பிடப்பட்ட மாவட்டத்தில் அல்லது முதல் நியமனம் பெறும் யாதேனுமொரு மாவட்டத்தில் /மாகாணத்தில் முதல் நியமனத் திகதி தொடக்கம் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) சேவையாற்றுவது கட்டாய சேவை நிபந்தனையாகும் எனக் கவனத்திற் கொண்டு கல்வி அமைச்சின் செயலாளருடன் பிணைமுறி மற்றும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

9.17 கல்வி அமைச்சினால் பாடநெறிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற தேசிய கல்வியியற் கல்லூரியை, வைத்திய / தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு பயிலுநர் முயற்சிக்கின்றாராயின் அவர் தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெற மாட்டார்.

9.18 சேர்த்துக்கொள்ளும் செயன்முறை ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அது தொடர்பான உரிய அலுவலர்களுக்கு பயிலுநரினால் அல்லது அவருடன் தொடர்புடைய பிற நபர்களால் முறையற்ற செல்வாக்குகள் செலுத்தப்பட்டால் அவர் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகைமை இல்லாதவராக கருதப்படுவார்.

9.19 விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கும் பாடநெறிக்குரிய அனைத்து கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு (2024.04.05) அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும்.

9.20 ஏதேனும் கல்வியியற் கல்லூரிக்கு ஏதேனும் பாடநெறிக்கு, உரிய மொழிமூலத்தில், உரிய மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை நிரப்பப்படுவதற்கு மாவட்ட /மாகாண /தேசிய தேர்ச்சிகளின் தொடரொழுங்கில் தகைமை பெற்றோர் போதுமான அளவில் இல்லாதிருப்பின் அக் கல்வியியற் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் ஏதேனும் பாடநெறிகளில் கல்வி முறைமைக்குள் காணப்படும் அதிகளவிலான ஆசிரிய தேவைப்பாடுள்ள பாடநெறிக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில் அவ்வவ் பாடநெறியின் கீழ் தேசிய மட்டத்தில் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் மூலம் எஞ்சிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும். (வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பக் கல்வி பாடநெறியின் கீழ் "கவனத்தில் கொள்க" இல் iv மற்றும் 6.3 - "ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்தலின்" கீழ் 6.3.8. இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அந்தப் பாடநெறியின் கீழ் முதலாவது வாய்ப்பு பெற்றுத் தரப்படும்)

10.0 **விண்ணப்பித்தலுக்கான அறிவுறுத்தல்கள் :**

- வர்த்தமானி அறிவித்தலில் 14.0 இற்கு உரியதான 14.1, 14.2, 14.3 மற்றும் 14.4 பகுதியின் கீழ் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் மாவட்ட மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பாக மிகவும் தெளிவாக விளங்கிக்கொண்டு அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

10.1 மிக விஷேடமானது

10.1.1 அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க வேண்டியது தொடரறா முறை (Online System) மூலம் மட்டுமே.

**கவனத்திற் கொள்க : பதிவுத் தபாலில் விண்ணப்பம் அனுப்பப்படக்கூடாது**.

10.1.2 தொடரறா முறை (Online System) மூலம் விண்ணப்பிப்பது ஆங்கில மொழி மூலமாக மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி உரிய தொடரறா முறைக்கு (Online System) நுழைவதற்காக கீழ்க் காட்டப்பட்டவாறு https://ncoe.moe.gov.lk/NcoeWebApp/ இணையத்தளத்திற்குள் நுழைந்து உரிய படிமுறைகளைக் கடைப்பிடித்து உங்களுடைய விண்ணப்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

10.2 மேற்காட்டிய 10.1.1 இற்கமைய விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்த (submit) பின்பு யாதேனும் ஒரு யாதும் மாற்றத்தையும் செய்வதற்கு அதற்காக 7 நாட்கள் வழங்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட அறிவுறுத்தல்களை மிகவும் நன்றாக வாசித்து மிகச் சரியான தரவுகளை வழங்குதலின் முழுப்பொறுப்பும் விண்ணப்பதாரியினுடையதாகும். விஷேடமாக விண்ணப்பிக்கும் பாடநெறி தொடர்பாக தகவல் அல்லது வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்காக பின்னர் விடுக்கும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாது என்பதை கவனத்தில் கொள்க.

10.3 வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்ட நிபந்தனைத் தகைமை மற்றும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி, ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் உச்சபட்சமாக மூன்று (03) பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

10.4 ஒரு பாடநெறிக்கு இரண்டு மொழிகள் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது இரண்டு (02) பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாக கருதப்படும். ஒவ்வொரு சமய மதகுருமார் தமது சமயத்திற்கு பொருத்தமான பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

உதாரணம் :- விஞ்ஞானப் பாடநெறி சிங்கள மொழிமூலம் மற்றும் ஆங்கில மொழிமூலம் ஆகிய இரண்டு மொழிமூலங்களிலும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் இரண்டு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாகக் கருதப்படுவர். எனவே அவ்விண்ணப்பதாரிக்கு விண்ணப்பிக்க முடிவது மேலும் ஒரு பாடநெறிக்கு மாத்திரமே.

10.5 வர்த்தமானி அறிவித்தலில் 6.2 - "நிரந்தர வதிவிடத்தைத் தீர்மானித்தல்" இன் கீழ் 6.2.1 பகுதிக்குரிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கிளிநொச்சி | 11 |
| மன்னார் | 12 |
| வவுனியா | 13 |
| முல்லைத்தீவு | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

- அந்த மாவட்டத்தின் இலக்கம் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவுக்குரிய மாவட்டத்திற்குரிய இலக்கத்தை சரியாக உள்ளிட வேண்டும்.

10.6 விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி ஒருவருக்கு பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி (Personal Email Address) இல்லையாயின் தொடரறா முறைமை (Online System) ஊடாக விண்ணப்பிக்குமுன் பிரத்தியேக மின்னஞ்சல் முகவரியை உருவாக்கிக் கொள்ளல் மிகவும் அவசியமானது. இந்த மின்னஞ்சல் முகவரி விண்ணப்பாதாரியின் தனிப்பட்டவொன்றாக தாயாரித்துக்கொள்ளப்பட வேண்டும்.

10.7 அது போல யாதேனும் பாடநெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டவாறு தகுதி இல்லாமல் விண்ணப்பித்த பின் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக கல்வி அமைச்சினால் எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10.8 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தொடரறா முறைமை (Online System) ஊடாக விண்ணப்பித்த பின் விண்ணப்பத்தின் பிரதியை அச்சிட்டு பெற்றுக்கொள்ளவேண்டிய இயலுமை விண்ணப்பதாரிக்கு உருவாக்கித் தரப்பட்டுள்ளதோடு அவ்வாறு பெற்றுக்கொண்ட நிரந்தர வன்பிரதியை (hard copy – PDF) தமது பொறுப்பில் வைத்துக்கொள்ளவேண்டும். யாதேனும் விசாரணைகள் அல்லது தேவைகளுக்காக முன்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரிய ஆவணத்தின் நிழல் பிரதி முன்வைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக கவனயீனமாகச் செயற்பட்டதன் காரணமாக விண்ணப்பதாரருக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக கல்வி அமைச்சு எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாது.

10.9 அதுபோல விண்ணப்பதாரியினால் விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டமை அனுமதி பெறுவதற்கான தகுதி அல்ல. மேலும் அவ்வவ் மாவட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் உள்ள வெற்றிடம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரி நிறுவக சபை /கல்விச் செயலாளர் வசமானதாகும்.

10.10 விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் போலியானது அல்லது மோசடி செய்யப்பட்டதாகவோ இருப்பது பின்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரி பாடநெறியிலிருந்து / சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அதன்பின் அரசாங்க சேவையில் எந்தவொரு நியமனத்தையும் பெற்றுக்கொள்ள தகைமையற்றவராவார்.

11.0 வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் அல்லது விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பாக கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் / கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12.0 "2021/2022 க.பொ.த. (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாவட்ட/தேசிய அடிப்படையில் பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளுதல் - 2023(2024)" இதன் 14.0 கீழ் எதிர்வரும் பக்கங்களில் காட்டப்பட்டுள்ள 14.1, 14.2, 14.3, 14.5, 14.6 மற்றும் 14.7 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி தவிர ஏனைய கல்வியியல் கல்லூரிகளுக்கு மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறிக்கும் மாவட்ட/தேசிய மட்டத்தில் ஆட்சேர்க்கும் எண்ணிக்கையாவதோடு 14.4, 14.8 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் ஒவ்வொரு பாடநெறிக்கும் பெருந்தோட்ட மாவட்ட/தேசிய அடிப்படையில் ஆட்சேர்க்கும் எண்ணிக்கையாகும்.

13.0 இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள மொழி உரையுடன் தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி உரைகள் பொருத்தமற்றுள்ள சந்தர்ப்பங்கள் தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி மூல உரையே வலுவிலிருக்கும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை,
2024, மாச்சு 11.

*14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)*

*14.1 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி தவிர (சிங்கள மொழி மூலம்) 2021*

| | | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வடமேல் | | வட மத்திய | | ஊவா | | சபரகமுவ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடப் பெயர் | தேசிய அடிப்படையில் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலன்னறுவை | பதுளை | மொனராகலை | இரத்தினபுரி | கேகாலை | மொத்தம் |
| ஆரம்பக் கல்வி | 235 | 13 | 12 | 12 | 12 | 12 | 10 | 11 | 12 | 10 | - | 2 | 5 | 2 | - | 8 | 11 | 10 | 12 | 10 | 12 | 10 | 12 | 11 | 13 | 13 | 235 |
| விஞ்ஞானம் | 53 | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | - | 1 | 2 | 1 | - | 1 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 52 |
| கணிதம் | 53 | 3 | 3 | 3 | 3 | 2 | 1 | 3 | 3 | 2 | - | 1 | 2 | 1 | - | 1 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 52 |
| விஞ்ஞானம் | 11 | 1 | 1 | - | 1 | - | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | 1 | 11 |
| பௌத்த சமயம் | 55 | 5 | 4 | 3 | 4 | 2 | 1 | 3 | 4 | 2 | - | 1 | 2 | 1 | - | 1 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 55 |
| கத்தோலிக்க சமயம் | 7 | 1 | 1 | | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 1 | - | 1 | - | 7 |
| கிறிஸ்தவ சமயம் | 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | 1 |
| 1ம் மொழி சிங்களம் | 53 | 4 | 5 | 3 | 4 | 2 | 1 | 2 | 3 | 2 | - | 1 | 2 | 1 | - | 1 | 3 | 2 | 3 | 1 | 3 | 1 | 2 | 1 | 3 | 2 | 52 |
| சித்திரம் | 23 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | - | - | - | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| நடனம் (கீழைத்தேய) | 23 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| சங்கீதம் (கீழைத்தேய) | 23 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| நாடகமும் அரங்கியலும் | 5 | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 1 | 1 | - | - | - | 5 |
| சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 43 | 4 | 3 | 2 | 3 | 2 | 1 | 2 | 3 | 2 | - | - | 1 | - | - | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 3 | 2 | 3 | 2 | 42 |
| மனைப் பொருளியல் | 8 | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 7 |
| விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | 23 | 2 | 2 | 1 | 2 | 1 | - | 1 | 1 | 1 | - | - | - | - | - | - | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| சித்திரம் மற்றும் கைவினை | 5 | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | 5 |
| வடிவமைப்பு மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பம் | 7 | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | 6 |
| வடிவமைப்பு மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பம் | 7 | - | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | 1 | - | - | 1 | - | 6 |
| வடிவமைப்பு, மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் | 7 | - | - | 1 | - | - | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | 1 | - | 1 | 6 |
| இரண்டாம் மொழி (சிங்களம்) | 30 | 2 | 2 | 2 | 2 | 2 | 1 | 2 | 2 | 1 | - | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 30 |
| விசேட கல்வி | 8 | - | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | 1 | - | 7 |
| வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | 5 | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | 1 | - | 5 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | 686 | 48 | 42 | 32 | 43 | 30 | 21 | 36 | 36 | 26 | - | 7 | 19 | 7 | - | 16 | 30 | 25 | 39 | 25 | 35 | 25 | 35 | 26 | 39 | 30 | 672 |

14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)

14.2 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி தவிர (தமிழ் மொழி மூலம்) 2021

| | | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வடமேல் | | வட மத்திய | | ஊவா | | சப்பிரகமுவ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடம் | தேசிய அடிப்படையில் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலன்னறுவை | பதுளை | மொணராகலை | இரத்தினபுரி | கேகாலை | மொத்தம் |
| ஆரம்பக் கல்வி | 88 | 3 | 2 | 2 | 4 | 2 | 3 | 2 | 2 | 1 | 9 | 4 | 5 | 4 | 3 | 8 | 7 | 8 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 87 |
| விஞ்ஞானம் | 29 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 28 |
| கணிதம் | 29 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 28 |
| சமூக விஞ்ஞானம் | 20 | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | - | 1 | | 20 |
| இந்து சமயம்/சைவ நெறி | 10 | - | - | - | 1 | | 1 | - | - | - | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | - | - | - | - | 1 | - | - | - | 10 |
| கத்தோலிக்க சமயம் | 6 | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - | - | - | 1 | - | - | - | 6 |
| கிறிஸ்தவ சமயம் | 2 | - | - | - | - | - | - | - | - | - | 1 | | | - | - | | - | - | - | - | - | - | - | - | - | - | 1 |
| இஸ்லாம் | 10 | 1 | 1 | | 1 | - | | - | 1 | - | - | - | - | - | - | 1 | | 1 | 1 | 1 | 1 | - | | | - | 1 | 10 |
| முதலாம் மொழி தமிழ் | 18 | 1 | - | - | 1 | 1 | - | 1 | - | - | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | - | 1 | 17 |
| சித்திரம் | 15 | - | 1 | - | - | - | 1 | - | 1 | - | 2 | 1 | - | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | - | 1 | - | 1 | | 15 |
| சங்கீதம் (கர்நாடக) | 8 | 1 | | - | 1 | - | - | - | - | - | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 7 |
| நடனம் (பரதம்) | 8 | - | 1 | - | - | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | 1 | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | - | 7 |
| நாடகமும் அரங்கியலும் | 3 | | | | | | | | | | 1 | | - | | | | 1 | | | | | | | | | | 2 |
| சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 19 | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | - | 1 | - | - | 1 | - | 1 | 1 | 19 |
| மனைப் பொருளியல் | 9 | - | - | - | 1 | - | 1 | - | - | - | 1 | - | | 1 | - | 1 | 1 | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | 9 |
| விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | 10 | - | - | - | - | - | 1 | - | - | - | 1 | 1 | - | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | - | - | 10 |
| சித்திரம் மற்றும் கைவினை | 5 | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 1 | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | 1 | 5 |
| வடிவமைப்பு மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பம் | 5 | 1 | - | - | 1 | - | - | - | - | - | 1 | - | - | - | - | | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | 5 |
| வடிவமைப்பு மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பம் | 5 | - | - | - | - | - | - | 1 | - | - | - | 1 | - | - | - | | - | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | 5 |
| வடிவமைப்பு, மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் | 5 | - | 1 | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | 1 | - | - | 1 | - | 5 |
| இரண்டாம் மொழி (தமிழ்) | 13 | 1 | | 1 | 1 | | | 1 | 1 | - | | - | 1 | | - | - | 1 | - | 1 | 1 | 1 | - | 1 | - | - | 1 | 12 |
| விசேட கல்வி | 5 | | 1 | | | 1 | | | | | | 1 | | | | 1 | | | | | | | | | 1 | | 5 |
| வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | 5 | 1 | - | | - | - | 1 | - | 1 | | 1 | | - | | - | - | 1 | - | - | | - | - | | - | - | - | 5 |
| மொத்தம் | 327 | 13 | 10 | 6 | 15 | 8 | 12 | 8 | 10 | 3 | 33 | 17 | 15 | 13 | 11 | 25 | 21 | 21 | 10 | 13 | 12 | 5 | 14 | 4 | 10 | 9 | 318 |

*14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)*

*14.3 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் (ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கல்லூரி தவிர (ஆங்கில மொழி மூலம்) - 2021*

| | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வடமேல் | | வட மத்திய | | ஊவா | | சப்பிரகமுவ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடக் குறியீட்டெண் மற்றும் பாடம் | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலனறுவை | பதுளை | மொணராகலை | இரத்தினபுரி | கேகாலை | மொத்தம் |
| விஞ்ஞானம் | 19 | 2 | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | | 1 | - | 1 | - | - | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | - | 1 | 1 | 19 |
| கணிதம் | 24 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | - | - | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | 24 |
| ஆங்கிலம் | 139 | 12 | 10 | 8 | 11 | 6 | 5 | 7 | 7 | 4 | 5 | 3 | 3 | 2 | 2 | 3 | 5 | 3 | 6 | 4 | 5 | 4 | 6 | 5 | 6 | 6 | 138 |
| மேலைத்தேய சங்கீதம் | 5 | 1 | 1 | - | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 5 |
| சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 5 | 1 | - | 1 | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | 5 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 45 | 3 | 2 | 1 | 2 | 1 | 1 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 2 | 3 | 1 | 2 | 2 | 2 | 2 | 3 | 3 | 45 |
| மொத்தம் | 237 | 21 | 16 | 12 | 18 | 9 | 7 | 13 | 11 | 6 | 11 | 4 | 5 | 3 | 3 | 7 | 9 | 7 | 12 | 6 | 9 | 8 | 10 | 7 | 11 | 11 | 236 |

14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த.(உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட அடிப்படையில் பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)

14.4 ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2021

| | | தேசிய அடிப்படையில் | மேல் | | மத்திய | | | தென் | | வடமேல் | ஊவா | | சபரகமுவ | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கொழும்பு | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | குருநாகல் | பதுளை | மொனராகல் | கேகாலை | இரத்தினபுரி | |
| சிங்கள மொழி மூலம் | ஆரம்பக் கல்வி | 5 | - | 1 | - | 1 | 1 | - | - | - | 1 | - | 1 | - | 5 |
| | விஞ்ஞானம் | 3 | - | - | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | 2 |
| | கணிதம் | 3 | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | 1 | 2 |
| | சமூக விஞ்ஞானம் | 5 | 1 | | - | - | 1 | - | 1 | - | - | 1 | 1 | - | 5 |
| தமிழ் மொழி மூலம் | ஆரம்பக் கல்வி | 15 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 15 |
| | விஞ்ஞானம் | 5 | - | 1 | 1 | - | 1 | - | - | - | - | 1 | 1 | - | 5 |
| | கணிதம | 5 | 1 | - | - | 1 | | - | 1 | - | 1 | - | - | 1 | 5 |
| | சமூக விஞ்ஞானம் | 5 | - | - | 1 | - | 1 | - | - | - | 1 | 1 | 1 | - | 5 |
| | முதலாம் மொழி (தமிழ்) | 8 | - | 1 | - | 1 | 1 | 1 | - | - | 1 | 1 | 1 | - | 7 |
| | சித்திரம் | 3 | - | - | - | - | 1 | - | - | - | 1 | - | - | - | 2 |
| | சங்கீதம் (கர்நாடக) | 3 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | 2 |
| | நாட்டியம் (பரத) | 3 | - | 1 | - | - | - | - | - | - | - | 1 | - | - | 2 |
| ஆங்கில மொழி மூலம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 5 | 1 | - | 1 | - | - | 1 | - | 1 | - | - | 1 | - | 5 |
| | மொத்தம் | 68 | 4 | 5 | 7 | 4 | 9 | 4 | 3 | 2 | 7 | 6 | 7 | 4 | 62 |

14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)

14.5 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் (ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கல்லூரி தவிர) (சிங்கள மொழி மூலம்) 2022

| பாடக் குறியீட்டெண் மற்றும் பாடம் | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வட மேல் | | வட மத்திய | | ஊவா | | சப்பிரகமுவ | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலநறுவை | பதுளை | மொணராகல் | இரத்தினபுரி | கேகாலை | |
| ஆரம்பக் கல்வி | 235 | 13 | 12 | 12 | 12 | 11 | 10 | 12 | 12 | 10 | - | 2 | 5 | 2 | - | 8 | 12 | 10 | 12 | 9 | 12 | 11 | 12 | 11 | 13 | 12 | 235 |
| விஞ்ஞானம் | 53 | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | - | 1 | 2 | 1 | - | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 52 |
| கணிதம் | 53 | 4 | 4 | 2 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | - | - | 1 | - | - | 1 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 52 |
| சமூக விஞ்ஞானம் | 12 | 1 | 1 | | 1 | | - | 1 | 1 | - | - | - | | - | - | - | 1 | - | 1 | - | 1 | | - | 1 | 1 | 1 | 11 |
| பௌத்த சமயம் | 55 | 4 | 4 | 3 | 4 | 3 | 2 | 3 | 2 | 1 | - | - | 1 | - | - | 1 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 4 | 55 |
| கத்தோலிக்க சமயம் | 8 | 1 | 1 | - | 1 | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | 7 |
| கிறிஸ்தவ சமயம் | 2 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 |
| 1ம் மொழி சிங்களம் | 53 | 4 | 4 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 | 2 | - | - | 2 | 1 | - | 1 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 52 |
| சித்திரம் | 23 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| நடனம் (கீழைத்தேய) | 23 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| சங்கீதம் (கீழைத்தேய) | 23 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| நாடகமும் அரங்கியலும் | 5 | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 1 | - | - | - | 5 |
| சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 43 | 3 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | - | 1 | 2 | 1 | - | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 2 | 2 | 2 | 42 |
| மனைப் பொருளியல் | 8 | 1 | - | - | 1 | | - | | 1 | | - | - | | - | - | - | | | 1 | | 1 | | 1 | - | 1 | - | 7 |
| விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | 23 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 22 |
| சித்திரம் மற்றும் கைவினை | 5 | 1 | | - | 1 | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | | - | - | 1 | | 1 | - | 5 |
| வடிவமைப்பு மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பம் | 7 | - | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | - | - | 1 | - | - | 6 |
| வடிவமைப்பு மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பம் | 7 | 1 | - | - | 1 | - | - | | 1 | - | - | - | - | - | - | 1 | - | - | 1 | | - | - | - | - | - | 1 | 6 |
| வடிவமைப்பு, மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் | 7 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | 1 | | 1 | | 1 | - | 6 |
| இரண்டாம் மொழி (சிங்களம்) | 30 | 3 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 30 |
| விசேட கல்வி | 8 | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | 1 | - | 7 |
| வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | 5 | 1 | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 1 | 5 |
| மொத்தம் | 688 | 49 | 39 | 29 | 41 | 28 | 25 | 35 | 33 | 24 | - | 5 | 18 | 7 | - | 20 | 31 | 25 | 37 | 25 | 37 | 25 | 38 | 30 | 37 | 34 | 672 |

14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)

14.6 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் (ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கல்லூரி தவிர (தமிழ் மொழி மூலம்) 2022

| பாடக் குறியீட்டெண் மற்றும் பாடம் | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வட மேல் | | வட மத்திய | | ஊவா | | சப்பிரகமுவ | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலன்றுவை | பதுளை | மொணராகலை | இரத்தினபுரி | கேகாலை | |
| ஆரம்பக் கல்வி | 88 | 3 | 2 | 2 | 3 | 2 | 4 | 2 | 2 | 1 | 9 | 4 | 4 | 4 | 3 | 7 | 6 | 6 | 3 | 3 | 3 | 2 | 5 | 2 | 3 | 2 | 87 |
| விஞ்ஞானம் | 29 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 3 | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 28 |
| கணிதம் | 29 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 3 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 28 |
| சமூக விஞ்ஞானம் | 20 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | 1 | 1 | 1 | 20 |
| இந்து சமயம்/சைவ நெறி | 10 | 1 | - | - | | | 1 | - | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | - | - | - | - | 1 | - | - | - | 10 |
| கத்தோலிக்க சமயம் | 7 | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 6 |
| கிறிஸ்தவ சமயம் | 1 | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 |
| இஸ்லாம் | 10 | 1 | 1 | | 1 | | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | | - | 1 | - | - | 1 | 10 |
| தமிழ் மொழி | 18 | | 1 | 1 | | 1 | | - | 1 | | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | 1 | 1 | - | 1 | - | 17 |
| சித்திரம் | 15 | 1 | - | - | - | 1 | - | - | - | - | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | - | 1 | - | 1 | 15 |
| சங்கீதம் (கர்நாடக) | 8 | - | - | - | - | - | 1 | - | - | - | 2 | - | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | 7 |
| நடனம் (பரதம்) | 8 | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | - | - | 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | 7 |
| நாடகமும் அரங்கியலும் | 3 | - | | | | | | | | | | 1 | | - | | | | 1 | | | | | | | | | 2 |
| சுகாதாரம் மற்றும் உடற்கல்வி | 19 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | 1 | 1 | | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | - | 1 | - | - | 1 | 18 |
| மனைப் பொருளியல் | 9 | 1 | - | - | 1 | 1 | - | - | | 1 | 1 | | | 1 | - | | 1 | - | 1 | - | | 1 | - | - | - | - | 9 |
| விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | 10 | - | - | - | 1 | - | 1 | - | - | - | 1 | 1 | - | - | - | 1 | 1 | 1 | - | 1 | 1 | - | - | 1 | - | - | 10 |
| சித்திரம் மற்றும் கைவினை | 5 | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | 5 |
| வடிவமைப்பு மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பம் | 5 | - | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | | 1 | - | - | - | - | - | - | - | 5 |
| வடிவமைப்பு மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பம் | 5 | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | - | 1 | - | - | - | - | | 1 | - | - | - | - | - | - | - | - | 5 |
| வடிவமைப்பு, மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் | 5 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | | | 1 | | | | 1 | | 1 | | - | 1 | | 5 |
| இரண்டாம் மொழி (தமிழ்) | 13 | - | - | 1 | - | 1 | - | 1 | - | - | - | - | 1 | - | - | 1 | | 1 | 1 | | 1 | 1 | 1 | - | 1 | 1 | 12 |
| விசேட கல்வி | 5 | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | | 1 | | | | 1 | | | 1 | | 1 | - | - | | 5 |
| வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | 5 | - | - | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | - | - | 1 | | | 1 | | - | | - | - | - | - | - | 5 |
| மொத்தம் - தெரிவு செய்யப்பட்ட அனைத்து பாடங்கள் | 327 | 14 | 9 | 8 | 12 | 11 | 12 | 8 | 8 | 2 | 30 | 17 | 15 | 14 | 14 | 22 | 16 | 22 | 13 | 11 | 10 | 9 | 15 | 7 | 9 | 9 | 317 |

14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு (2024)

14.7 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் (ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கல்லூரி தவிர (ஆங்கில மொழி மூலம்) 2022

| பாடக் குறியீட்டெண் மற்றும் பாடம் | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வடமேல் | | வட மத்திய | | ஊவா | | சப்பிரகமுவ | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலநறுவை | பதுளை | மொணராகலை | இரத்தினபுரி | கேகாலை | |
| விஞ்ஞானம் | 19 | 1 | 1 | - | 1 | - | 1 | 1 | | 1 | | 1 | | | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 18 |
| கணிதம் | 24 | 2 | 2 | 1 | 2 | 1 | | 1 | 1 | 1 | 1 | | 1 | | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | 1 | 23 |
| ஆங்கிலம் | 139 | 11 | 11 | 9 | 12 | 7 | 5 | 7 | 8 | 5 | 6 | 3 | 3 | 1 | 1 | 3 | 4 | 3 | 5 | 4 | 4 | 3 | 6 | 5 | 7 | 6 | 139 |
| மேலைத்தேய சங்கீதம் | 5 | 1 | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | 1 | | 5 |
| சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 5 | 1 | 1 | - | | - | - | - | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | 1 | | 5 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 45 | 3 | 3 | 2 | 3 | 2 | 1 | 2 | 3 | 1 | 1 | 1 | 1 | | | 1 | 2 | 2 | 3 | 2 | 2 | 1 | 2 | 1 | 3 | 3 | 45 |
| மொத்தம் | 237 | 19 | 19 | 12 | 19 | 10 | 7 | 11 | 13 | 8 | 9 | 5 | 5 | 1 | 1 | 6 | 8 | 7 | 11 | 8 | 8 | 6 | 10 | 7 | 14 | 11 | 235 |

14.0 2021 மற்றும் 2022 ஆம் வருடத்தில் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேசிய, மாவட்ட மட்டத்தில் ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023 (2024)

14.8 ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) மொழி மூலம் - 2022

| | | | மேல் | | மத்திய | | | தென் | | வடமேல் | ஊவா | | சப்பிரகமுவ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேசிய அடிப்படை | கொழும்பு | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | குருநாகல் | பதுளை | மொணராகலை | கேகாலை | இரத்தினபுரி | மொத்தம் |
| சிங்கள மொழி மூலம் | ஆரம்பக் கல்வி | 5 | – | – | 1 | – | 1 | – | 1 | – | – | 1 | – | 1 | 5 |
| | விஞ்ஞானம் | 3 | – | – | – | 1 | – | – | – | – | – | – | 1 | – | 2 |
| | கணிதம் | 3 | – | 1 | – | – | – | – | – | – | 1 | – | – | – | 2 |
| | சமூக விஞ்ஞானம் | 5 | – | 1 | – | 1 | – | 1 | – | – | 1 | – | – | 1 | 5 |
| தமிழ் மொழி மூலம் | ஆரம்பக் கல்வி | 15 | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 15 |
| | விஞ்ஞானம் | 5 | 1 | – | – | 1 | – | – | 1 | – | 1 | – | – | 1 | 5 |
| | கணிதம் | 5 | – | 1 | 1 | – | 1 | – | – | – | – | 1 | 1 | – | 5 |
| | சமூக விஞ்ஞானம் | 5 | – | 1 | – | 1 | 1 | – | – | 1 | – | – | – | 1 | 5 |
| | முதலாம் மொழி தமிழ் | 8 | – | – | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | 1 | – | 1 | 7 |
| | சித்திரம் | 3 | – | – | 1 | – | – | – | – | – | – | – | 1 | – | 2 |
| | கர்நாடக சங்கீதம் | 3 | – | – | – | 1 | – | – | – | – | – | – | – | 1 | 2 |
| | பரத நாட்டியம் | 3 | – | – | – | – | – | – | 1 | – | 1 | – | – | – | 2 |
| ஆங்கில மொழி மூலம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 5 | – | 1 | – | 1 | 1 | – | – | – | 1 | – | – | 1 | 5 |
| | மொத்தம் | 68 | 2 | 6 | 4 | 9 | 7 | 2 | 5 | 3 | 7 | 4 | 4 | 9 | 62 |

03-346

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.